©
தமிழ்நாடு அரசு
2008

[Regd. No. TN/CCN/117/2006-08.
[விலை: ரூ. 16.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 40] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 15, 2008
புரட்டாசி 29, திருவள்ளுவர் ஆண்டு–2039

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழக சட்டம்**

**பிரிவுகளின் அமைப்பு**

**அத்தியாயம் - I**

**முன்னுரை**

**பிரிவுகள் :**

1. குறுந்தலைப்பு அளாவுகை பொருந்துகை மற்றும் தொடக்கம்
2. பொருள் வரையறைகள்

**அத்தியாயம் - II**

**பல்கலைக்கழகம்**

3. பல்கலைக்கழகத்தை அமைத்துருவாக்குதல்
4. பல்கலைக்கழகங்களின் நோக்கங்களும், அதிகாரங்களும்
5. கல்லூரிகள், பிற பல்கலைக்கழகங்கள் எதனுடனும் இணைக்கப்பெறுதல் ஆகாது
6. மேற்பார்வை அதிகாரம்

**அத்தியாயம்- III**

**பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்**

7. பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்
8. வேந்தர்
9. இணைவேந்தர்
10. துணைவேந்தர்
11. துணைவேந்தரின் அதிகாரங்களும், கடமைகளும்
12. பதிவாளர்
13. நிதி அலுவலர்
14. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்
15. துணைவேந்தர் மற்றும் பிற அலுவலர்கள் முதலானோர் பொது ஊழியர்களாக இருத்தல்

## அத்தியாயம்- IV

### இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்

16. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்
17. உறுப்பினருக்கான தகுதிக்கேடு
18. ஒரு சில நேர்வுகளில் ஆட்சிக்குழு மற்றும் கல்வி மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் படுவதற்கான அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கான தகுதிக்கேடுகள்
19. ஆட்சிக்குழு
20. ஆட்சிக்குழுவின் அதிகாரங்கள்
21. ஆட்சிக்குழுவின் கூட்டங்கள்
22. கல்வி மன்றம்
23. கல்வி மன்றத்தின் அதிகாரங்களும் அலுவல்களும்
24. கல்வி மன்றத்தின் கூட்டங்கள்
25. நிதிக்குழு
26. திட்டமிடும் குழு
27. பாடக் குழுக்கள்
28. புலங்களை அமைத்துருவாக்குதலும் செயற்பணிகளும்
29. பிற அதிகார அமைப்புகளை அமைத்துருவாக்குதல்

## அத்தியாயம்- V

### நிலை விதிகள் (Statutes), அவசர விதிகள்(Ordinances) ஒழுங்குமுறை விதிகள் (Regulations)

30. நிலை விதிகள்
31. நிலை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது
32. அவசர விதிகள்
33. அவசர விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது
34. ஒழுங்குமுறை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது

## அத்தியாயம் - VI

### மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும் அவர்களின் தங்குமிடமும்

35. பல்கலைக்கழக குறித்த கால படிப்புப்பிரிவுகளுக்கு சேர்த்துக்கொள்ளுதல்
36. பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படுதல்
37. பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு தகுதியுடையதாக ஆக்கப்படுகின்ற வருகைப் பதிவு
38. தங்குமிடங்களும், மாணவர் விடுதிகளும்

## அத்தியாயம் - VII

### பல்கலைக்கழக நிதியங்கள்

39. பொது நிதியங்கள்

## அத்தியாயம் - VIII

### பணிவரைக்கட்டுகள் (நிபந்தனைகள்)

40. ஓய்வூதியம், பணிக்கொடை முதலானவை
41. பணி நிபந்தனைகள்
42. தெரிவுக்குழு
43. துறைத்தலைவர்களின் பணியின் வரையரைகளும் வரைக்கட்டுகளும்
44. புலன்களின் முதன்மையர்கள்

## அத்தியாயம் - IX

### பல்வகைப்பட்டவை

45. தற்செயல் காலியிடங்களை நிரப்புதல்

46. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளின் மற்றும் அமைப்புகளின் நடவடிக்கைகள் காலியிடங்கள் காரணமாக செல்லாதவையாக ஆக்கப்படுதல் ஆகாது

47. பல்கலைக்கழக உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல்

48. பல்கலைக்கழக அதிகார அமைப்புகளையும், அமைப்புகளையும் அமைத்துருவாக்குதல் பற்றிய பூசல்

49. குழுக்களை அமைத்துருவாக்குதல்

50. தகவல் பெறுவதற்கான அதிகாரம்

51. முதல் துணைவேந்தரின் நியமனம்

52. முதல் பதிவாளரின் நியமனம்

53. முதல் துணைவேந்தரின் மாறுதற் கால அதிகாரங்கள்

54. ஒரு சில கல்லூரிகளை பல்கலைக்கழகத்திற்கு மாற்றுதல்

55. ஒரு சில தமிழ்நாடு சட்டங்கள் பொருந்தாது என்பது

56. நூலகர்

57. சிறப்பு நியமன முறை

58. இணைக்கப்பட்ட கல்லூரிகளின் மீதான அறிக்கை

59. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்

இணைப்புப் பட்டியல்

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008–ஆம் ஆண்டு மே திங்கள் 26–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது ; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 33/2008**

***ஆசிரியர் கல்வியை மேம்படுத்தி வளர்ப்பதற்காக தமிழ்நாடு மாநிலத்தில் ஆசிரியர் கல்விக்கான பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கி நிறுவி அமைப்பதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டம்.***

இந்தியகுடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

**அத்தியாயம் - I**

**முன்னுரை**

**1.** (1) இந்த சட்டம், 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகச் சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பு அளாவுகை பொருந்துகை மற்றும் தொடக்கம்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது,—

(*a*) இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டதாக கொள்ளப்பட்ட கல்லூரி ஒவ்வொன்றுக்கும்;

(*b*) இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்து, இந்தச் சட்டத்தின் நிலை விதிகளின் அவசர விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் இப்பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்படக்கூடிய பிற கல்லூரி அல்லது கல்வி நிலையம் ஒவ்வொன்றுக்கும்; மற்றும்

(*c*) ஆசிரியர் கல்வியில் பட்டம் எதுவும் வழங்கப்படுவதற்காக தகுதியுடையதாகக் கூடிய குறித்த கால படிப்பு எதனையும் நடத்தி வருகிற அல்லது பயிற்சி கொடுக்கிற கல்லூரி ஒவ்வொன்றிற்கும், பொருந்தும்.

(4) இந்தச் சட்டம் மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும், மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகைமுறைகளுக்கு வெவ்வேறு தேதிகள் குறிக்கப்படலாம்.

**2.** இந்தச் சட்டத்தில், தருவாய் வேறுபொருள் குறித்தாலன்றி— பொருள் வரையறைகள்.

(*a*) ''இணைக்கப்பெற்ற கல்லூரி'' என்றால், இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும், இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டதும் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் கல்வியில் பட்டங்களுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான குறித்த கால படிப்புப் பிரிவுகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி எதுவும் என்று பொருள்படும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்பட்ட கல்லூரி ஒன்றையும் உள்ளடக்கும்,

(*b*) ''தன்னாட்சி கல்லூரி'' என்றால், விதி ஒன்றினால் ஒரு தன்னாட்சி கல்லூரி என பெயர் குறிக்கப்பட்ட கல்லூரி எதுவும் எனப் பொருள்படும்.

(*c*) ''கல்லூரி'' என்றால், இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மற்றும் ஆசிரியர் கல்விக்கான தேசிய மன்றத்தால் ஏற்பளிக்கப்பட்டவாறான ஆசிரியர் கல்வியில் குறித்த கால படிப்புப் பிரிவுகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி எனப் பொருள்படும்.

(*d*) ''அரசு'' என்றால், மாநில அரசு எனப் பொருள்படும்.

(*e*) ''மாணவர்விடுதி'' என்றால், இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கிணங்க இப்பல்கலைக்கழகத்தால் பேணி வரப்பெறும் அல்லது ஏற்பிசைவு அளிக்கப்பெற்றுள்ள, இப்பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் தங்கியிருப்பதற்கான ஓரிடம் என்று பொருள்படுவதோடு, இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவு அளிக்கப்பெற்றிருப்பதாக கொள்ளப்படும் மாணவர்விடுதி ஒன்றையும் உள்ளடக்கும்.

(*f*) ''அறிவிக்கை செய்யப்பெற்ற தேதி'' என்றால், 1–ஆம் பிரிவின் (4)–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பெற்ற அறிவிக்கையில் குறித்துரைக்கப்பெற்ற தேதி எனப் பொருள்படும்.

(g) '' பட்ட மேற்படிப்பு கல்லூரி'' என்றால், இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும் இப்பல்கலைக்கழகத்தின் பட்ட மேற்படிப்பு பிரிவுகளுக்கு வழி வகை செய்கின்ற ஆசிரியர் கல்வியில் குறித்த கால பட்ட மேற்படிப்புப் படிப்பு பிரிவுகளுக்கு வகை செய்கின்றதுமான ஓர் இணைக்கப்பட்ட கல்லூரி எனப் பொருள்படும்.

(*h*) ''வகுத்துரைக்கப்பெற்ற'' என்றால், இந்தச் சட்டத்தாலோ அல்லது நிலை விதிகளாலோ, அவசர விதிகளாலோ அல்லது ஒழுங்குமுறை விதிகளாலோ வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்.

(*i*) ''முதல்வர்'' என்றால், கல்லூரி ஒன்றின் தலைவர் என்று பொருள்படும்.

(*j*) ''நிலை விதிகள்'' ''அவசர விதிகள்'' ''ஒழுங்குமுறை விதிகள்'' என்பவைகள் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பெற்றுள்ள அல்லது தொடர்ந்து செல்லாற்றல் பெற்றிருக்குமாறு செய்யப்பெற்றுள்ள முறையே இப்பல்கலைக்கழகத்தின் நிலை விதிகள், அவசர விதிகள், மற்றும் ஒழுங்குமுறை விதிகள் எனப் பொருள்படும்.

(*k*) ''ஆசிரியர்கள்'' என்றால், ஆசிரியர்கள் என நிலைவிதிகளால் விளம்பப்படக்கூடிய இணைக்கப்பெற்ற கல்லூரிகளில் அல்லது மாணவர் விடுதிகளில் கல்வி கற்பிக்கின்ற விரிவுரையாளர்கள், சிறப்புப் பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் மற்றும் கல்வி கற்பிக்கின்ற பிற நபர்கள் என்றும் நூலகர்கள் என்றும் பொருள்படும்.

(*l*) ''பல்கலைக்கழகம்'' என்றால், தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகம் எனப் பொருள்படும்.

(*m*) ''பல்கலைக்கழக பரப்பிடம்'' என்றால், 1—ஆம் பிரிவின் (2)—ஆம் உட்பிரிவின்படி இந்தச் சட்டம் அளாவி நிற்கின்ற பரப்பிடம் எனப் பொருள்படும்.

(*n*) ''பல்கலைக்கழக மையம்'' என்றால், உயர்ந்த நிலையில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடுவதற்கு தகுதி வாய்ந்த ஒன்று அல்லது மேற்பட்ட துறைகளை அல்லது கல்லூரிகளை கொண்டிருக்கின்ற பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் அமைந்த பரப்பிடம் எதுவும் எனப் பொருள்படும்.

(*o*) ''பல்கலைக்கழக மானிய ஆணையம்'' என்றால், 1956—ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணைய சட்டத்தில் 4—ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட ஆணையம் எனப் பொருள்படும். மையச் சட்டம் 30/1956.

(*p*) ''பல்கலைக்கழக நூலகம்'' என்றால், பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்டதாயின் இல்லாவிடினும் அதனால் பேணி வரப்படும் ஒரு நூலகம் எனப் பொருள்படும்.

## அத்தியாயம் - II

## பல்கலைக்கழகம்

பல்கலைக் கழகத்தை அமைத்துரு வாக்குதல்.

**3.** (1) ''தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகம்'' என்ற பெயரில் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவி அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பல்கலைக்கழகம், ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும். என்பதோடு, நிலையான தொடர்பாட்டு உரிமையையும் தனித்த ஓர் இலச்சினையும் பெற்றிருத்தலும் வேண்டும், மேலும் மேற்சொன்ன பெயரில் தான் வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) இப்பல்கலைக்கழகத்தின் தலைமையகம் சென்னை எல்லைகளுக்குள்ளோ அத்தகைய எல்லைகளைச் சுற்றியுள்ள நூறு கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உள்ள இடம் எதிலுமோ அமைந்திருக்கும்.

பல்கலைக் கழகத்தின் நோக்கங்களும் அதிகாரங்களும்.

**4.** இப்பல்கலைக்கழகமானது பின்வரும் நோக்கங்களையும் அதிகாரங்களையும் பெற்றிருத்தல் வேண்டும், அவையாவன—

(1) இம்மாநிலத்தில் கல்வி என்ற முறையில் எல்லா நிலைகளிலும் ஆசிரியர் கல்விக்காக தேசிய மன்றத்தால் ஏற்பளிக்கப்பட்ட ஆசிரியர் கல்வியை தலைமை ஏற்று நடத்துதல்;

(2) ஆசிரியர் கல்வியில் ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் ஆசிரியர் கல்வியில் புதுமையான படிப்புப் பிரிவுகளை கண்டறிவதற்கு வழிவகைகளைக் கண்டுபிடித்தல்;

(3) ஆசிரியர் கல்விக்கான தேசிய மன்றத்தால் ஏற்பளிக்கப்பட்ட ஆசிரியர் கல்வியில் பட்டங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல்;

(4) இப்பல்கலைக்கழக்கத்திலோ அல்லது வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி இப்பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவு வழங்கப்பட்ட பிற மையங்கள் அல்லது கல்வி நிலையம் எதிலும் ஆராய்ச்சியை நடத்தும் நபர்களுக்கு ஆசிரியர் கல்வியில் பட்டங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குதல்;

(5) வகுத்துரைக்கப்பட்ட முறையிலும் வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி ஆசிரியர் கல்வியில் கௌரவ பட்டங்களை வழங்குதல்;

(6) ஆசிரியர் கல்வியினுடைய வளர்ச்சிக்காக தற்கால துறைகளில் செயல் திட்டங்களை வழங்குவதற்கான செயல் வகைகளை தயாரித்தல்;

(7) தற்காலத் துறைகளில் செயல் திட்டங்களை வழங்கும் பொருட்டு விரிவாக்கப் பணிகளை மேம்படுத்தும் பொருட்டும் ஆசிரியர் கல்வியை மேம்படுத்துவதில் கருத்தரங்குகள், பயிற்சிக்கூடங்கள், ஆய்வரங்குகள் ஆகியவற்றை நடத்துதல் மற்றும் அமைத்தல்;

(8) இப்பல்கலைக்கழகத்தின் விடுதிகளை மேற்பார்வையிடுதல் மற்றும் கட்டுப்பாடு செய்தல் மற்றும் மாணவர்களுக்கிடையே ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துதல், அவர்களின் நல்வாழ்வு மற்றும் பொதுவான நலனை மேம்படுத்துவதற்காக ஏற்பாடு செய்தல்;

(9) எந்த நிபந்தனைக்குட்பட்டு பட்டம் அல்லது பிற கல்விச் சிறப்புகளை நிறுத்தி வைக்கப்படலாம் என்பதை வகுத்துரைத்தல்,

(10) அவ்வப்போது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய நோக்கங்களுக்காக இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் போன்ற, நோக்கங்களையும் குறிக்கோள்களையும் கொண்டு, மேம்படுத்துவதை கருத்தில் கொண்டுள்ள பிற பல்கலைக்கழகம், அதிகார அமைப்பு அல்லது சங்கம் அல்லது பிற பொது அல்லது தனியார் அமைப்பு எதனுடனும் ஒத்துழைத்துப் பணியாற்றுதல்;

(11) பல்கலைக்கழக நூலகங்களையும் ஆராய்ச்சி நிலையங்களையும் வெளியீட்டுப் பிரிவையும் அமைத்தல் மற்றும் பேணி வருதல்;

(12) ஆராய்ச்சிக்கான பதவிகளை ஏற்படுத்துதல் மற்றும் அத்தகைய பதவிகளுக்கு நியமனம் செய்தல்;

(13) வகுத்துரைக்கப்பட்ட முறையில் பயண உதவித் தொகைகள் படிப்புதவித் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியன உள்ளிட்ட பட்டதாரி உதவித் தொகைகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதும், வழங்குவதும்;

(14) இப்பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்காக விடுதிகளையும், இப்பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கு தங்குமிடங்களையும் நிறுவுதல், பேணி வருதல் அல்லது அதற்கு ஏற்பிசைவு அளித்தல் மற்றும் அத்தகைய ஏற்பிசைவினைத் திரும்பப் பெறுதல்;

(15) வகுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்படி இணைக்கப்பட்ட கல்லூரிகளாகவோ அல்லது பட்டமேற்படிப்பு கல்லூரிகளாகவோ கல்லூரிகளை இப்பல்கலைக்கழகத்துடன் இணைத்தல்; மற்றும் அக்கல்லூரிகளிடமிருந்து இணைப்பினை திரும்பப் பெறுதல்;

(16) கட்டணங்களை நிர்ணயிப்பதும், வகுத்துரைக்கப்படக்கூடிய கட்டணங்களை கோரிப் பெறுவதும்;

(17) நிலைக் கொடைகளையும், பல்கலைக்கழகத்தின் பிற சொத்துக்கள் மற்றும் நிதியகங்களையும் வைத்து வருதல் மற்றும் நிருவகித்து வருதல்;

(18) இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக இப்பல்கலைக்கழகத்தின் சொத்தின் பிணையத்தின் பேரில் அரசின் ஏற்பளிப்புடன் பணத்தைக் கடனாகப் பெறுதல்;

(19) பல்கலைக்கழகத்தின் கீழ் கல்வி நிலையம் எதிலும் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் அதன் உரிமைகளையும் கடமை பொறுப்புகளையும் மேற்கொள்ளுதல் உள்ளடங்கலான இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களை செயற்படுத்தி எய்தும் நோக்கத்திற்காக பிற அமைப்புகளுடன் அல்லது நபர்களுடன் உடன்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளுதல்;

(20) பொதுவாக, இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை மேம்படுத்துவதற்கு தேவையாயிருக்கக்கூடிய அல்லது விரும்பத்தக்கதாக இருக்கக்கூடிய பிற செயல்கள் அனைத்தையும் செய்வது அல்லது நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்பது.

கல்லூரிகள் பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப் பெறுதல் ஆகாது.

5. இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள ஆசிரியர் கல்விக்கான தேசிய மன்றத்தால் ஏற்பளிக்கப்பட்டவாறான ஆசிரியர் கல்வியை போதிக்கின்ற கல்லூரி எதுவும், தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகமல்லாத பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்படுதலாகாது.

மேற்பார்வை அதிகாரம்.

6. (1) அரசானது தான் பணிக்கக் கூடியவரால், அல்லது பணிக்கக் கூடியவர்களால் இப்பல்கலைக்கழகத்தை அதன் கட்டடங்களை, நூலகங்களை, அருங்காட்சியகங்களை, பட்டறைகள் மற்றும் தளவாடத்தையும் மற்றும் இப்பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவு அளிக்கப்பட்டுள்ள நிலையம் ஏதொன்றையும் மேலும் இப்பலைக்கழகத்தால் நடத்தப்படும் அல்லது செய்யப்படும் பிற பணிகள் ஆகியவற்றையும், ஆய்வு அல்லது விசாரணை செய்யப்படுமாறு செய்விப்பதற்கும் இப்பல்கலைக்கழகம் தொடர்புடைய பொருட்பாடு எதனையும் பொருத்து விசாரணை ஒன்று செய்யப்படுமாறு செய்விப்பதற்குமான அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும். அரசு அவ்வாறு ஆய்வு செய்யப்படுமாறு அல்லது விசாரணை செய்யப்படுமாறு செய்விப்பதற்கான தனது எண்ணம் குறித்து ஒவ்வொரு நேர்விலும் இப்பல்கலைக்கழகத்திற்கு அறிவிப்பு கொடுத்தல் வேண்டும். மற்றும் இப்பல்கலைக்கழகம் அதில் தன்தரப்பை எடுத்துரைப்பதற்கு உரிமை தகுதியுடையதாக இருக்கும்.

(2) அரசு அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவுகள் குறித்து தனது கருத்துக்களை ஆட்சிக்குழுவிற்கு தெரிவித்தல் வேண்டும் என்பதுடன், அதன் பேரிலான ஆட்சிக்குழுவின் கருத்தைக் கண்டறிந்த பின்பு, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை என்னவென்பது குறித்து இப்பல்கலைக்கழகத்திற்கு ஆலோசனை கூறலாம் மேலும் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான காலவரம்பொன்றையும் நிர்ணயிக்கலாம்.

(3) ஆட்சிக்குழு அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவுகளின் மீது எடுக்கக் கருதியுள்ள அல்லது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை ஏதேனுமிருப்பின், அது குறித்து அரசுக்கு அறிக்கை கொடுத்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையானது அரசு பணிக்கக்கூடிய காலத்திற்குள் அனுபப்படுதல் வேண்டும்.

(4) அரசு நிறைவுறும் வகையில் நியாயமான காலத்திற்குள் ஆட்சிக் குழுவானது நடவடிக்கை எடுக்காதிருக்குமிடத்து, அரசு ஆட்சிக்குழுவால் அளிக்கப்பட்ட விளக்கம் அல்லது எடுத்துரைப்பு எதையும் பரிசீலனை செய்தல் பின்னர்தான் பொருத்தமென நினைக்கக்கூடிய பணிப்பாணைகளைப் பிறப்பிக்கலாம். ஆட்சிக் குழுவும் அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும். அரசினால் அதன்பொருட்டு நிர்ணயிக்கப்படக்கூடிய காலத்திற்குள்ளாக அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடக்காத நேர்வில், அரசு அத்தகைய பணிப்பாணைகளுக்கிணங்கி நடக்கும் பொருட்டு நபர் எவரையும் அல்லது குழுமம் ஏதொன்றையும் நியமிப்பதற்கான அதிகாரத்தை பெற்றிருக்கும் என்பதுடன், அதற்கான செலவுகளுக்கு தேவைப்படக்கூடிய ஆணைகளை பிறப்பிக்கும்.

## அத்தியாயம் - III

## பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்

பல்கலைக் கழகத்தின் அலுவலர்கள்.

7. இப்பல்கலைக்கழகம் பின்வரும் அலுவலர்களை கொண்டிருக்கும், அதாவது:—

(1) வேந்தர்;

(2) இணை வேந்தர்;

(3) துணைவேந்தர்;

(4) பதிவாளர்;

(5) நிதி அலுவலர்;

(6) தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்; மற்றும்

(7) இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர்களென நிலை விதிகளால் விளம்பப்படக்கூடிய பிற நபர்கள்.

8. (1) தமிழ்நாடு ஆளுநர், இப்பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருப்பார். அவர் தமது பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழகத்தின் தலைவராக இருப்பார் என்பதுடன், இப்பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா எதற்கும், வந்திருக்கும்போது அதற்கு தலைமை வகித்தலும், பட்டங்கள் மற்றும் பிற கல்விச்சிறப்புக்களை அவற்றைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களுக்கு வழங்குவார்.

(2) அதிகார அமைப்புகளுக்கு, நபர்களை பெயர் குறித்து நியமிப்பதற்கான அதிகாரம் வேந்தருக்கு வழங்கப்பட்டிருக்கிற விடத்து, வேந்தர் துணைவேந்தருடன் கலந்தாய்வு செய்தும், தேவையான அளவுக்கும், மற்றபடி போதிய அளவு சார்பான்மை பெற்றிராத பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் நலன்களுக்கு சார்பாளர்களாக அமையும் பொருட்டு அப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களை பெயர் குறித்து நியமிப்பார்.

(3) வேந்தர், தாமே முற்பட்டோ அல்லது விண்ணபத்தின் பேரிலோ நடவடிக்கைகள் எவற்றையும் பொருத்து, அத்தகைய நடவடிக்கைகளின் முறைமை குறித்தோ, அவற்றில் எடுக்கப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஏதொன்றின் சீர்மை, சட்டமுறைமை அல்லது பொருத்தமுடைமை குறித்தோ, தான் தெளிவுற உறுதிபடுத்திக்கொள்ளும் பொருட்டு, இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர் எவரின் அல்லது அதிகார அமைப்பு ஏதொன்றின் பதிவுக்கட்டினையும் தருவித்து ஆய்வு செய்யலாம் மற்றும் எந்த நேர்விலும் அத்தகைய முடிவு அல்லது ஆணை எதுவும் திருத்தியமைக்கப்படவோ, அறவு செய்யப்படவோ, எதிர்மாறாகப்படவோ, அல்லது மறுபரிசீலனைக்காக திருத்தியனுப்பி வைக்கப்படவோ வேண்டும் என்று வேந்தருக்கு தோன்றுமானால் அவர் அதன்படியே ஆணைகளைப் பிறப்பிக்கலாம்:

**முதலாம் வரம்புரை** : ஆனால், இந்தப் பிரிவின்படியான அதிகாரங்களை செலுத்தப்படுவதற்கு வேந்தரிடம் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் அந்த விண்ணப்பம் தொடர்புடையதாகவிருக்கிற நடவடிக்கைகள் முடிவு அல்லது ஆணை எந்தத் தேதியில் அவ்விண்ணபதாரருக்கு தெரிவிக்கப்பட்டதோ, அந்தத் தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை :** மேலும், எவரொருவருக்கும், ஊறுவிளைவிக்கத்தக்கதான ஆணை எதுவும் அந்நபர் தன் முறையீடுகளைச் செய்துகொள்வதற்கான வாய்ப்பொன்று அத்தகையவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, பிறப்பிக்கப்படுதலாகாது.

(4) நபர் எவருக்கும், வேந்தரின் முன் ஒப்புதலளிப்பின்றி இப்பல்கலைக்கழகத்தால் மதிப்புறு பட்டம் அல்லது பிற கல்விச் சிறப்பு எதுவும் வழங்கப்படுதலாகாது.

(5) வேந்தர், இந்தச் சட்டத்தினாலோ அல்லது அதனை அடியொற்றியோ, தமக்கு வழங்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தி வருவார்; மற்றும் பிற கடமைகளைப் புரிந்து வருவார்.

9. (1) தமிழ்நாடு மாநிலத்தில் கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், இப்பல்கலைக்கழகத்தின் இணைவேந்தராக இருந்து வருவார். இணைவேந்தர்.

(2) இணைவேந்தர், இந்தச் சட்டத்தின் மூலமாக அல்லது அதன்படி தமக்கு வழங்கப்படக்கூடிய, அதிகாரங்களைச் செலுத்தி வருவார்; மற்றும் கடமைகளைப் புரிந்து வருவார்.

10. (1) துணை வேந்தரின் ஒவ்வொரு நியமனமும், (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட பெயர்ப்பட்டியல் ஒன்றிலிருந்து வேந்தரால் செய்யப்படும். அத்தகைய பெயர்பட்டியலில் மேற்சொன்ன குழுவின் உறுப்பினர் எவருடைய பெயரும் அடங்கியிருத்தல் ஆகாது: துணைவேந்தர்.

**வரம்புரை** : ஆனால், அக்குழுவினால் அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட பெயர்பட்டியலில் உள்ள நபர்களில் எவரொருவருக்கும் வேந்தரானவர் ஒப்புதல் அளிக்கவில்லையாயின், (2)–ஆம் உட்பிரிவிற்கிணங்கிய வகையில் மூன்று வெவ்வேறு பெயர்களைக்கொண்ட புதியதொரு பெயர்ப் பட்டியலைக் கொடுப்பதற்கு அவர் மற்றொரு குழுவினை அமைத்துருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்; மற்றும் அவர் புதிய பெயர்ப்பட்டியலில் பெயர் குறிப்பிட்டுள்ள நபர்களில் எவரொருவரையும் துணைவேந்தராக நியமிப்பார்.

(2) (1)– ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக அக்குழுவானது மூவரைக் கொண்டிருக்கும், அவர்களில் ஒருவர் வேந்தரால் பெயர் குறித்து நியமனம் செய்யப்படுதலும் ஒருவர் அரசால் பெயர் குறித்து நியமனம் செய்யப்படுதலும் மேலும் ஒருவர் ஆட்சிக்குழுவால் பெயர் குறித்து நியமனம் செய்யப்படுதலும் வேண்டும்:

**வரம்புரை :** ஆனால், அவ்வாறு பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்டவர் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புக்குள் ஏதொன்றின் உறுப்பினர் ஒருவராகவும் இருத்தலாகாது.

(3) துணைவேந்தர் பதவியை வகிப்பவர் கல்வியாளரொருவராக இருத்தல் வேண்டும்; அவர்—

(*i*) பல்கலைக்கழகம் எதிலும் பல்கலைக்கழக பேராசிரியரொருவராக குறைந்தது எட்டாண்டு கால அனுபவம் அல்லது

(*ii*) பல்கலைக்கழகம் எதனின் சிறப்பு பேராசிரியராகவோ அல்லது இணைக்கப்பட்ட கல்லூரி எதனின் சிறப்பு பேராசிரியராகவோ பணியில் குறைந்தது பதினைந்தாண்டு கால அனுபவம்

பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்.

(4) துணைவேந்தர், மூன்றாண்டு கால அளவுக்கு பதவி வகிப்பார்; மற்றும் மூன்றாண்டு கால அளவுக்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராவார்:

**முதலாம் வரம்புரை :** ஆனால், துணைவேந்தர், வேந்தருக்கு முகவரியிட்டு தாம் கையொப்பமிட்டு எழுத்து வாயிலாகவும், இரண்டு திங்கள் கால முன்னறிவிப்பு கொடுப்பதற்கு பின்பும் தனது பதவியை விட்டு விலகலாம்:

**இரண்டாம் வரம்புரை :** மேலும், துணைவேந்தராக நியமிக்கப்பெற்ற ஒருவர் தம்முடைய பதவி காலத்தின்போதோ அதன் நீட்டிப்பு எதனின்போதுமோ அறுபத்தைந்து வயதினை அவர் நிறைவெய்துவாரானால், பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

(5) துணைவேந்தரின் பதவியில் தற்காலிக காலியிடம் ஏதேனும் ஏற்படும்போது, அல்லது அத்துணைவேந்தர் நோய், பணிக்குவராமை என்ற காரணத்தாலோ அல்லது ஏதேனும் பிற காரணத்தாலோ, தம்முடைய பதவியின் அதிகாரங்களை செலுத்திவரவும், கடமைகளைப் புரிந்து வரவும், இயலாதிருப்பாரானால் இப்பல்கலைக்கழகத்தின் மிக்க முதுநிலைப்பேராசிரியர், துணைவேந்தரின் அதிகாரங்களைச் செலுத்தி வருவதற்கும் கடமையைப் புரிந்து வருவதற்கும் தேவைப்படும் ஏற்பாடுகளை ஆட்சிக்குழு செய்கின்றவரையிலும் அத்துணைவேந்தரின் அதிகாரங்களை செலுத்தி வருவார். கடமைகளைப் புரிந்து வருவார்.

(6) துணைவேந்தர், இப்பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராக இருப்பார்; மற்றும் அவருடைய ஊதியங்களும் பணிகுறித்த வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளும் பின்வருமாறு இருந்துவரும்:

(*a*) துணைவேந்தருக்கு, திங்களொன்றுக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் சம்பளம் அல்லது அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய உயர்வான சம்பளம் கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவருடைய பதவிக்காலம் முழுவதும் அறைகலன்களுடனான குடியிருப்பொன்றை வாடகை செலுத்தமின்றிப் பயன்படுத்துவதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராவார். மேலும் அவர் குடியிருப்பைப் பேணி வருவது பொறுத்த செலவுப் பொறுப்பு எதுவும் தனிப்பட்டு அத்துணைவேந்தரை சார்தல் ஆகாது. அவர், நிலை விதிகளில் வகை செய்யக்கூடிய அத்தகைய பிற இடை ஆதாயம் பெற உரிமையுடையவராவார்.

(*b*) துணைவேந்தர், அவ்வப்போது வேந்தரின் ஒப்புதலளிப்புடன், ஆட்சிக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய பணிமுடிவுநிலை நன்மைகளுக்கும் படித்தொகைகளுக்கும் உரிமைத் தகுதியுடையவராவார்:

**வரம்புரை :** ஆனால்,—

(*i*) இப்பல்கலைக்கழகத்தின்; அல்லது

(*ii*) வேறேதேனும் பல்கலைக்கழகத்தின் அல்லது அந்தப் பல்கலைக்கழகத்தால் பேணிவரப் பெறும் அல்லது அதனோடு இணைக்கப்பெற்றுள்ள கல்லூரி அல்லது கல்வி நிலையத்தின் பணியாளர் ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப்படுமிடத்து, அவர் தொகையளிப்புச் செய்பவராக உள்ள வருங்கால வைப்பு நிதியத்திற்கு தொடர்ந்து தொகையளிக்க அவர் அனுமதிக்கப்பெறுவார். மேலும் இப்பல்கலைக்கழகத்தின் பங்களிப்பானது துணைவேந்தராக அவர் நியமிக்கப்படுவதற்கு அடுத்து முன்பு அவர் பங்களித்திருந்த அளவுக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(*c*) துணைவேந்தர், ஆட்சிக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வீதங்களில் பயணப்படிக்கு உரிமைத் தகுதியுடைவராயிருப்பார்.

(*d*) துணைவேந்தர், செயலார்ந்த பணியிலிருக்கையில் அவரால் பணியில் செலவழிக்கப்பட்ட கால அளவுகளில் பதினொன்றில் ஒரு பங்கு முழுச்சம்பளத்துடன் கூடிய ஈட்டியவிடுப்புக்கு அவர் உரிமைத் தகுதியுடையவராயிருப்பார்:

**வரம்புரை :** ஆனால், துணைவேந்தர் தம்முடைய பதவிக்காலம் முடிவடையும் தேதிக்கு முன்பு போதிய காலத்திற்குள் முன்னதாகவே அத்துணைவேந்தரால் விண்ணப்பிக்கப்பட்ட ஈட்டிய விடுப்பு, இப்பல்கலைக்கழகத்தின் நலன் கருதி, வேந்தரால் மறுக்கப்படுகிறபோதும், தம்முடைய பதவிக்காலம் முடிவடையும் தேதிக்கு முன்பே அவ்விடுப்பினை அவர் எடுக்காமல் இருக்கும்போதும், பெருமளவு (உயர்ந்த பட்சம்) இருநூற்று நாற்பது நாட்களுக்கு உட்பட்டு தம்முடைய கணக்கில் இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பைப் பொறுத்து தம்முடைய பதவியைத் துறந்த பின்பு விடுப்புச் சம்பளத்திற்கு சம மதிப்புள்ள பணத்தைப் பெறுவதற்கு அவர் உரிமை தகுதியுடையவராயிருப்பார்.

(*e*) துணைவேந்தர், மருத்துவ அல்லது பிறவாறான காரணங்களால் தனது அலுவலக பதவிக்காலத்தின்போது மூன்று மாதங்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கு சம்பளம் இல்லாமல் விடுப்பு எடுக்கத் தகுதியுடையவராயிருப்பார்:

**வரம்புரை :** ஆனால், அத்தகைய விடுப்பானது (*d*)—ஆம் கூறின்படி எந்த அளவுக்கு ஈட்டிய விடுப்புக்கு அவர் உரிமைத்தகுதியுடையவராயிருக்கின்றாரோ அந்த அளவுக்கு முழுச் சம்பளத்துடன்கூடிய விடுப்புக்கு மாற்றிக் கொள்ளப்படலாம்.

துணை வேந்தரின் அதிகாரங்களும் கடமைகளும்.

**11. (1)** துணைவேந்தர், இப்பல்கலைக்கழகத்தின் கல்வித் தலைவராகவும், முதன்மை நிர்வாக அலுவலராகவும் இருந்து வருவார். மற்றும் வேந்தரும் இணை வேந்தரும் வருகை தராதபோது, இப்பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா எதிலும் தலைமைவகித்து பட்டங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகளை, அவற்றைப் பெறுவதற்கு உரிமை தகுதியுடையவர்களுக்கு வழங்குவார். ஆட்சிக்குழு, கல்வி மன்றம், நிதிக்குழு ஆகியவற்றின் பதவி வழி உறுப்பினராகவும், தலைவராகவும் இருப்பார். மற்றும் இப்பல்கலைக்கழத்தின் அதிகார அமைப்பு ஏதொன்றின் கூட்டம் எதிலும் வந்திருப்பதற்கும் உரை நிகழ்த்துவதற்கும் உரிமைத் தகுதியுடையவராயிருப்பார். ஆனால், தொடர்புடைய அதிகார அமைப்பின் உறுப்பினர் ஒருவராக அவர் இருந்தாலன்றி, அதில் வாக்களிக்க உரிமை தகுதியுடையவராகமாட்டார்.

**(2)** இந்தச்சட்டம், நிலைவிதிகள், அவசரவிதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றின் வகைமுறைகள் கடைபிடிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதை உறுதிபடுத்திக்கொள்வது, துணைவேந்தரின் கடமையாகும். மேலும், இந்த நோக்கத்திற்காக தேவையான அனைத்து அதிகாரங்களையும் அவர் செலுத்தலாம்.

**(3)** துணைவேந்தர், ஆட்சிக்குழு, கல்விமன்றம், நிதிக்குழு ஆகியவற்றின் கூட்டங்களை கூட்டுவதற்கு அதிகாரம் பெற்றிருப்பார்.

(4) (*a*) துணைவேந்தர், எப்பொருள் குறித்தும் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் பெற்றிருப்பார். மற்றும் ஆணையின் மூலமாக தாம் தேவையென கருதக்கூடிய நடவடிக்கை எடுப்பார். ஆனால், அதன் பின்பு கூடிய விரைவில் அந்தப் பொருட்பாட்டினைப் பொறுத்தவரையில் சாதாரணமாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய அலுவலருக்கு அல்லது அதிகார அமைப்பிற்கு அல்லது பிற அமைப்பிற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைப் பற்றி அறிவிப்பார்:

**வரம்புரை :** ஆனால் அத்தகைய ஆணை எதுவும், பெரும்பாலும் ஊறுபடக்கூடியவருக்கு (பாதிக்கப்படக்கூடியவருக்கு) கேட்கப்படுவதற்கான நியாயமானதொரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, பிறப்பிக்கப்படுதலாகாது.

(*b*) இந்த உட்பிரிவின்படி துணைவேந்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை இப்பல்கலைக்கழக பணியில் உள்ள எவரையேனும் ஊறுபடுத்துகிறபோது, அத்தகையவர் அத்தகைய நடவடிக்கைக் குறித்து அவர் அறிவிப்புப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆட்சிக்குழுவிடம் மேல்முறையீடொன்றை முன்னிடுவதற்கு உரிமை தகுதியுடையவராவார். துணைவேந்தர், அத்தகைய மேல்முறையீட்டின்பேரில் ஆட்சிக்குழுவினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினை செயல்படுத்துவார்.

(5) துணைவேந்தர், பல்கலைக்கழகத்து ஆசிரியர்கள் பிற பணியாளர் ஆகியோரின் நியமனம், தற்காலிக பணி நீக்கம், பணியறவு ஆகியவை தொடர்பாக ஆட்சிக்குழுவின் ஆணைகளையும் ஆட்சிக் குழுவின் பிறவாறான முடிவு எதனையும் செயற்படுத்துவார்.

(6) துணைவேந்தர், பல்கலைக்கழகத்து அலுவல்களின் மீது கட்டுப்பாட்டு அதிகாரத்தை செலுத்துவார். மற்றும் இப்பல்கலைக்கழகத்தில் உரியவாறு ஒழுங்குமுறை நடத்தை பேணிவரப்படுவதற்கு பொறுப்புடையவராயிருப்பார்.

(7) துணைவேந்தர், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி, விரிவாக்கக் கல்வி மற்றும் பாடத்திட்ட மேம்பாடு ஆகியவற்றுக்கான ஒத்திசைவிற்கும் ஒருங்கிணைப்பிற்கும் பொறுப்புடையவராயிருப்பார்.

(8) துணைவேந்தர் நிலைவிதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்தி வருவார்; மற்றும் பிற கடமைகளைப் புரிந்து வருவார்.

12. (1) பதிவாளர், ஆட்சிக் குழுவினால் நியமிக்கப்படும் இப்பல்கலைக்கழகத்தின் சம்பளம் பெறும் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும்; தகுதிப்பாடுகளும், நியமனமுறையும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்; மற்றும் பதிவாளரின் பணி குறித்த வரையறைகளும் வரைகட்டுகளும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்— பதிவாளர்.

(*a*) பதிவாளரின் பதவியை வகிப்பவர், பல்கலைக்கழக மானியக்குழுவினால் வகுத்துரைக்கப்பட்ட நெறிமுறைகளை நிறைவேற்றுதல் வேண்டும்;

(*b*) பதிவாளர், மூன்றாண்டுகால அளவுக்கு பதவி வகிப்பார்:

**வரம்புரை:–** ஆனால், பதிவாளர் கல்வியாளராக இருப்பாராயின் அறுபது வயது வரையிலும் அவ்வாறு கல்வியாளராக இல்லாவிட்டால் ஐம்பத்தெட்டு வயதினை நிறைவெய்தியதும் அல்லது இந்தக் கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள கால அளவு முடிவடைந்ததும் இவற்றில் எது முந்தியோ அதன் பேரில், ஓய்வு பெறுதல் வேண்டும்.

(*c*) பதிவாளரின் ஊதியங்களும் பணி குறித்த வரையறைகளும் வரைகட்டுகளும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருந்து வரும்;

(*d*) பதிவாளரின் பதவி காலியாக இருக்கும்போது அல்லது பதிவாளர் நோய், பணிக்கு வராமை என்கிற காரணத்தால் அல்லது பிற காரணம் எதனாலேனும் தம்முடைய பதவிக்கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும்பொழுது பதிவாளரின் பதவிக்கடமைகளை அந்த நோக்கத்திற்காக துணைவேந்தர் நியமிக்கும் ஒருவரால் புரிந்து வரப்படும்.

(2) (*a*) பதிவாளர், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் கல்வித் துறைப் பணியாளர்கள் நீங்கலாக, ஆட்சிக்குழுவின் ஆணைகளில் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய பணியாளர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் விசாரணை நடத்தப்படுவதற்கிடையே அவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்வதற்கும் அவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதற்கு அல்லது அவர்கள் மீது கண்டனத் தண்டனை விதிப்பதற்கு அல்லது சம்பள உயர்வை நிறுத்தி வைப்பதற்குமான அதிகாரத்தைப் பெற்றிருப்பார்:

**வரம்புரை :** ஆனால், அத்தகைய தண்டனை எதுவும் தொடர்புடையவருக்கு, அவரை பொறுத்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கெதிராக காரணம் காட்டுவதற்கான நியாயமானதொரு வாய்ப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, விதிக்கப்படுதலாகாது.

(*b*) (*a*) எனும் கூறில், குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டனைகளில் எதையும் விதிக்கின்ற பதிவாளரின் ஆணை எதற்கும் எதிராக துணைவேந்தரிடம் மேல்முறையீடொன்றை செய்து கொள்வதற்கு உரிமை உண்டு.

(*c*) பதிவாளரின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட தண்டனை தேவைப்படுகிறது என்று அந்த விசாரணை வெளிப்படுத்துகிற நேர்வு எதிலும் பதிவாளர் அந்த விசாரணை முடிவடைவதன் பேரில் அறிக்கை ஒன்றை, தம்முடைய பரிந்துரைகளோடு துணைவேந்தருக்கு கொடுத்தல் வேண்டும்:

**வரம்புரை :** ஆனால், தண்டனை எதையும் விதிக்கின்ற துணைவேந்தரின் ஆணை ஒன்றுக்கு எதிராக ஆட்சிக்குழுவிடம் மேல்முறையீடு ஒன்றைச் செய்து கொள்வதற்கு உரிமை உண்டு.

(*d*) (*b*) எனும் கூறின்படி அல்லது (c) எனும் கூறின்படி மேல்முறையீடு எதுவும், எந்த ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த ஆணையை விண்ணப்பதாரர் பெற்ற தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவடைந்த பின்பு முன்னிடப்படுதலாகாது.

(3) பதிவாளர், ஆட்சிக்குழு, கல்வி மன்றம் புலங்கள் மற்றும் பாடக்குழுக்கள் ஆகியவற்றின் பதவி வழிச்செயலாளராக இருந்து வருவார். ஆனால், இந்த அதிகார அமைப்புகளில் ஏதொன்றின் உறுப்பினராகவும் கொள்ளப்படுதல் ஆகாது.

(4) (*a*) பதிவுக்கட்டுகளுக்கும் தனித்த இலச்சினைக்கும் தம்முடைய பொறுப்புக்கு ஆட்சிக்குழு அனுப்ப வேண்டிய இப்பபல்கலைக்கழகத்தின் அத்தகைய பிற சொத்துக்கும் பாதுகாவலராக இருப்பது;

(*b*) கல்வி மன்றத்தின், ஆட்சிக் குழுவின் புலங்களின், பாடக்குழுக்களின் மற்றும் இப்பல்கலைக்கழக்கத்தின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு ஏதொன்றின் கூட்டங்களையும் கூட்டுகிற அறிவிப்புகள் அனைத்தையும் அனுப்புவது;

(*c*) கல்வி மன்றத்தின், ஆட்சிக் குழுவின், புலங்களின், பாடக் குழுக்களின் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு ஏதொன்றின் கூட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் பற்றிய நடவடிக்கைக் குறிப்பேடுகளை வைத்து வருவது;

(*d*) ஆட்சிக் குழுவின் கடிதத் தொடர்பை நடத்தி வருவது ;

(*e*) இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புக் கூட்டங்களின் பொருள் நிரலின் படிகளை, அவை அனுப்பப்பட்டவுடனும் அத்தகைய கூட்ட நடவடிக்கைகளின் குறிப்புரைகளையும் வேந்தருக்கு அனுப்புவது; மற்றும்

(*f*) நிலை விதிகளில், அவசர விதிகளில் அல்லது ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடிய அல்லது ஆட்சிக் குழுவாலோ, துணைவேந்தராலோ, அவ்வப்போது கோரப்படக்கூடிய பிற அதிகாரங்களை செலுத்திவருவதும் பிற கடமைகளைப் புரிந்து வருவதும்

பதிவாளரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(5) இப்பல்கலைக்கழகத்தினால் அல்லது அதற்கு எதிராக தொடரப்படும் உரிமை வழக்குகள் மற்றும் எடுக்கப்படும் பிற சட்ட நடவடிக்கைகள் பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு உண்மையென உறுதிமொழி அளிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய உரிமை வழக்குகளில் மற்றும் நடவடிக்கைகளில் நீதிமுறைக் கட்டளைகள் அனைத்தும் பதிவாளருக்கு விடுக்கப்பட்டு, அவருக்குச் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

நிதி அலுவலர்.

**13.** (1) நிதி அலுவலர், இதன் பொருட்டு ஆட்சிக் குழுவால் குறித்துரைக்கப்படக் கூடிய அத்தகைய கால அளவுக்கு அந்த ஆட்சிக் குழுவால் நியமிக்கப்படும் நிதி அலுவலர் இப்பல்கலைக்கழகத்தின் சம்பளம் பெறும் முழுநேர அலுவலராக இருப்பார்.

(2) நிதி அலுவலரின் நியமனம் ஒவ்வொன்றும் அரசினால் பரிந்துரை செய்யப்படும் உள்ளாட்சி நிதிக் கணக்குகள் இணை இயக்குநர் அல்லது நிதித் துறையிலுள்ள அரசு சார்புச் செயலாளரின் படிநிலைக்கு குறையாத மூன்று அலுவலர்களைக் கொண்ட பெயர்ப் பட்டியல் ஒன்றிலிருந்து ஆட்சிக் குழுவால் செய்யப்படும்.

(3) நிதி அலுவலரின் ஊதியங்களும் பணி குறித்த பிற வரையறைகள் மற்றும் வரைகட்டுகள், அவசர விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக் கூடியவையாக இருக்கும்.

(4) நிதி அலுவலர், ஐம்பத்தெட்டு வயதினை எய்தியதின்பேரில் அல்லது (1)– ஆம் உட்பிரிவின்படி ஆட்சிக் குழுவினால் குறித்துரைக்கப்படும் கால அளவு முடிவடைவதன்பேரில் இவற்றில் எது முந்தியதோ அதன் பேரில் ஓய்வு பெறுதல் வேண்டும்.

(5) நிதி அலுவலரின் பதவி காலியாக இருக்கும்போது அல்லது நிதி அலுவலர் நோய், பணிக்கு வராமை என்கிற காரணத்தால் அல்லது பிற காரணம் எதனாலேனும் தம்முடைய பதவிக் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும்போது நிதி அலுவலரின் பதவிக் கடமைகள் அந்த நோக்கத்திற்காக துணைவேந்தர் நியமிக்கும் ஒருவரால் புரிந்து வரப்படும்.

(6) நிதி அலுவலர், நிதிக் குழுவின் பதவி வழி செயலாளராக இருத்தல் வேண்டும்; ஆனால் அவர் அத்தகைய குழுவின் உறுப்பினராகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(7) நிதி அலுவலர்,

(*a*) இப்பல்கலைக்கழகத்தின் நிதியங்களின் மீது பொதுவான கண்காணிப்புச் செலுத்தி வருவார், மற்றும், பல்கலைக்கழகத்தின் நிதிக் கொள்கை குறித்து அதற்கு ஆலோசனை வழங்குவார், மற்றும்

(*b*) ஆட்சிக் குழவினால் தமக்குக் குறித்தளிக்கப்படக் கூடிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்தி வருவார், பிற நிதி சார்ந்த அலுவல்களை புரிந்து வருவார்.

***வரம்புரை :—*** ஆனால், நிதி அலுவலர், ஆட்சிக் குழுவின் முன் ஒப்புதளிப்பின்றி செலவு எதையும் செய்தலோ, வகுத்துரைக்கப்படக்கூடிய தொகைக்கு மேற்படும் முதலீடு எதையும் செய்தாலோ ஆகாது.

(8) ஆட்சிக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு நிதி அலுவலர்—

(*a*) பொறுப்புக் கட்டளை மற்றும் நிலைக் கொடைச் சொத்து உள்ளடங்கலாக இப்பல்கலைக்கழகத்தின் சொத்தினையும் முதலீடுகளையும் வைத்து நிருவகிப்பார்.

(*b*) ஓராண்டிற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினங்களுக்காக ஆட்சிக்குழுவால் நிருணயிக்கப்பட்ட வரம்புகள் மேற்படாதவாறும், பணங்கள் அனைத்தும் அவை வழங்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட நோக்கங்களுக்காகச் செலவிடப்படுவதையும் உறுதி செய்து கொள்வார்;

(*c*) இப்பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள், நிதி மதிப்பீடுகள், வரவு செலவுத் திட்டம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும் ஆட்சிக்குழுவிடம் அவற்றை அளிப்பதற்கும் பொறுப்புடையவராவார்;

(*d*) பணம் மற்றும் வங்கி இருப்புகளையும் முதலீடுகளையும் இடைவிடாது கண்காணித்து வருவார்;

(*e*) வருவாய் வசூலின் வளர்ச்சியைக் கண்காணித்து வசூல் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள் குறித்து ஆலோசனை வழங்குவார்;

(*f*) கட்டடங்கள், நிலங்கள் அறைகலன்கள் சாதனம் ஆகியவற்றின் பதிவேடுகள் நாளதுவரை வைத்துப் பேணி வரப்படுவதையும், இப்பல்கலைக்கழகத்தால் பேணி வரப்படும் அலுவலகங்கள், சிறப்பு மையங்கள், ஆகிய அனைத்திலுமுள்ள சாதனங்கள் மற்றும் பிற நுகரத்தக்க பொருள்களின் இருப்பு நிலையைச் சரிப்பார்க்கும் பணி நடத்தப்படுவதையும் உறுதி செய்துகொள்ளுவார்;

(*g*) அதிகாரமளிக்கப்படாத செலவினம் எதுவும் பற்றி அல்லது பிற நிதிசார் முறைகேடு பற்றித் துணைவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்; மற்றும் தவறு செய்துள்ளவர் மீது எடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கைக் குறித்து யோசனை கூறுவார்; மற்றும்

(*h*) தம்முடைய கடமைகளைப் புரிவதற்காகத் தாம்தேவையெனக் கருதக்கூடிய தகவல் அல்லது விவர அறிக்கை எதையும் இப்பல்கலைக்கழகத்தினால் பேணி வரப்படும் அலுவலகம், மையம் ஆகிய எதிலிருந்தும் தருவிப்பார்;

(9) இப்பல்கலைக்கழகத்திற்கு செலுத்தத்தக்க பணம் எதற்காகவும் நிதி அலுவலரோ அல்லது ஆட்சிக்குழுவால் இதற்கென உரியவாறு அதிகாரமளிக்கப்பட்டவரோ, அதிகாரமளிக்கப்பட்டவர்களாகவோ, அளிக்கும் பற்று சீட்டானது, அப்பணம் செலுத்தி தீர்க்கப்பட்டதற்கான போதிய நிறைவேற்ற சான்றாகும்.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.

14. (1) தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவுக்கும், வரையறைகள் மற்றும் வரைக் கட்டுக்களின்பேரிலும், ஆட்சிக்குழுவால் நியமிக்கப்படும் இப்பல்கலைக் கழகத்தின் ஒரு முழுநேர சம்பளம் பெறும் அலுவலராக இருப்பார்.

(2) தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் பதவியை வகிப்பவர் பல்கலைக்கழக மானியக்குழுவினால் வகுத்துரைக்கப்பட்ட நெறிமுறைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் வகுத்துரைக்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தி வருவார். கடமைகளைப் புரிந்து வருவார்.

மையச்சட்டம் XIV/1860

துணைவேந்தர் மற்றும் பிற அலுவலர்கள் முதலானோர் பொது ஊழியர்களாக இருத்தல்.

15. துணைவேந்தர், பதிவாளர், நிதி அலுவலர், தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் பிற பணியாளர்கள் ஆகியோர் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதனையும் ஒட்டி செயற்படுகின்றபோது அல்லது செயல்படுவதாக புலப்படுகின்றபோது இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21—ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கொள்ளப்பெறுவார்கள்.

## அத்தியாயம்–IV

## பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்

பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்.

**16. (1)** இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும். அவையாவன:–

1. ஆட்சிக்குழு
2. கல்விமன்றம்
3. நிதிக்குழு
4. பாடக்குழுக்கள்; மற்றும்
5. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் என நிலை விதிகளால் விளம்பப் படக்கூடிய அத்தகைய பிற அதிகார அமைப்புகள்.

உறுப்பினருக்கான தகுதிக்கேடு.

**17. (1)** நபரெவரும், தேர்தல் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படும் தேதியன்று அவர்,–

(a) மனச்சீர்கேடுற்றவராகவோ அல்லது செவிட்டு ஊமையராகவோ அல்லது

(b) நொடிப்பு நிலையரொருவராக நீதிமுறையில் தீர்மானிக்கப்பட வேண்டி விண்ணப்பித்துக் கொண்டுள்ள ஒருவராக அல்லது விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையரொருவராக இருப்பாராயின்; அல்லது

(c) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்குகின்ற குற்றச்செயல் எதற்காகவும் குற்றவழக்கு நீதிமன்றமொன்றினால் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டவராக இருப்பாராயின் ;

இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் எதனின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ இருப்பதற்கு தகுதி உடையவராகமாட்டார்.

**(2) (1)**ஆம் உட்பிரிவின்படி நபரொருவர் தகுதியற்றவரா என்பது குறித்து பூசல் அல்லது ஐயம் ஏற்படும் நேர்வில் ஆட்சிக் குழுவானது அதனைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதோடு அதன் முடிவே அறுதியானதாகவும் இருக்கும்.

ஒருசிலநேர்வுகளில் ஆட்சிக்குழு மற்றும் கல்வி மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் படுவதற்கான அல்லது பெயர் குறித்து நியமிக்கப் படுவதற்கான தகுதிக்கேடுகள்.

**18.** (1) 19 மற்றும் 22 ஆம் பிரிவுகளின் என்ன அடங்கியிருந்தபோதிலும், இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிலோ அல்லது கல்வி மன்றத்திலோ அல்லது இரண்டிலுமோ ஆறு ஆண்டுகள் மொத்த கால அளவு ஒன்றுக்கு உறுப்பினரொருவராகப் பதவிவகித்த நபரொருவர் மேற்சொன்ன இரண்டு அதிகார அமைப்புகளில் ஏதொன்றுக்கும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ தகுதி உடையரா் ஆகாா்;

**முதலாம் வரம்புரை**:—ஆனால், இந்த உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள ஆறு ஆண்டுகள் என்கிற மொத்தக் காலத்தினை கணக்கிடும் நோக்கத்திற்காக ஒரு அதிகார அமைப்பில் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலமாகவோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதன் மூலமாகவோ பதவி வகித்த மூன்றாண்டுக்கால அளவும் மற்றும் மற்றொரு அதிகார அமைப்பில் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலமாகவோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதன் மூலமாகவோ பதவி வகித்த மூன்றாண்டுக்கால அளவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதற்கிணங்கிய வகையில் ஆட்சிக் குழுவிற்கோ அல்லது கல்வி மன்றத்திற்கோ தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அத்தகைய நபர் தகுதி உடையவர் ஆகார்.

**இரண்டாம் வரம்புரை**:—மேலும், இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, தற்காலிக காலியிடத்தில் இந்த உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள அதிகார அமைப்பு ஏதொன்றிலும் ஓராண்டிற்குக் குறையாமல் பதவி வகித்திருக்கிற நபரொருவர் அந்த அதிகார அமைப்பில் மூன்று ஆண்டுகள் கால அளவு ஒன்றிற்குப் பதவி வகித்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

**மூன்றாம் வரம்புரை**:—அதோடுகூட இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, நபர் ஒரு அதிகார அமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருப்பின் மற்றும் அத்தகைய நபர் முதலில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பில் உறுப்பினராக இருந்ததன் விளைவாக மற்றொருஅதிகார அமைப்பிற்கு உறுப்பினராயிருப்பின் முதலில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பில் பதவி வகித்த அந்தக் காலத்தை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2).(1)–ஆம் உட்பிரிவில் உள்ள எதுவும்,

(i) 19–ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள பதவி வழி உறுப்பினர்கள் தொடர்பாகவோ;

(ii) ஆனால் 24ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் (e) இனத்தில் சுட்டப்பட்டுள்ள கல்வி மன்றத்தில் பிறவாறு உறுப்பினராக இல்லாத ஆட்சிக்குழுவின் உறுப்பினர்கள் உள்ளடங்காத 22–ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள பதவிவழி உறுப்பினர்கள் தொடர்பாகவோ;

பொருந்தாது;

**19.** (1) வேந்தர், 51–ஆம் பிரிவின்படி முதல் துணைவேந்தர் நியமிக்கப்பட்டதற்குப் பின்பு, கூடியவிரைவில் ஆட்சிக் குழுவினை அமைத்தல் வேண்டும். ஆட்சிக்குழு.

(2) ஆட்சிக் குழுவானது, துணைவேந்தருக்குக் கூடுதலாக பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அதாவது:–

**வகை 1–பதவிவழி உறுப்பினர்கள்**

(*a*) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(*b*) நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(*c*) சட்டத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(*d*) பள்ளிக் கல்வித் துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(*e*) கல்லூரிக் கல்வி இயக்குநர்; மற்றும்

(*f*) ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்.

**வகை II–பிற உறுப்பினர்கள்**

(*a*) துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில், புலங்களின் தலைவர்கள் இடையேயிருந்து வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(*b*) அரசின் பரிந்துரையின்பேரில் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளின் பேராசிரியர்கள் மற்றும் துறைத்தலைவர்களுக்கிடையேஇருந்து வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(*c*) அரசின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களுக்கிடையேயிருந்து இரண்டு உறுப்பினர்கள்;

(*d*) அரசின் பரிந்துரையின் பேரில், இணைக்கப்பட்ட கல்லூரிகளின் மேலாண்மைகளிடையே இருந்து வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;

(*e*) மாநிலத்தின் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் அவர்களுக்கிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(*f*) அரசால் நியமிக்கப்படும் கல்வியாளர்களுள் ஒருவர்; மற்றும்

(*g*) வேந்தரால், பெயர் குறித்து நியமிக்கப்படும் சிறந்த கல்வியாளர்களுள் ஒருவர்.

(3) துணைவேந்தர், ஆட்சிக் குழுவின் பதவிவழித் தலைவராக இருப்பார்.

(4) உயர்கல்வியைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது சட்டத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது பள்ளிக்கல்வித் துறையைப் பொறுப்பில்கொண்டுள்ள அரசின் செயலாளரோ காரணம் எதற்காகவும் ஆட்சிக் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது இருக்கும் நேர்வில், அவர் தன்னுடைய துறையில் அரசின் துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறைவாக அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அனுப்பலாம்.

(5) (*a*) பிறவாறு வகைசெய்யப்பட்டிருந்தால் தவிர, பதவிவழி உறுப்பினர்கள் அல்லாத ஆட்சிக் குழுவின் உறுப்பினர்கள், மூன்று ஆண்டுக் கால அளவிற்குப் பதவிவகித்தல் வேண்டும். மற்றும் அத்தகைய உறுப்பினர்கள் இன்னொரு மூன்று ஆண்டுக் கால அளவிற்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து அமர்த்தப்படுவதற்கோ உரிமைத் தகுதி உடையவர் ஆவர்.

(*b*) தற்காலிக காலி இடத்தில், ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினரொருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறவிடத்து அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுகிறவிடுத்து, அத்தகைய உறுப்பினர் எவராலும் ஓராண்டிற்குக் குறையாமல் வகித்து வரப்பட்ட பதவிக் கால அளவானது முழுமையான மூன்று ஆண்டுகளைக் கொண்ட கால அளவாகக் கருதப்படுதல் வேண்டும்:

**முதலாம் வரம்புரை :**—குறிப்பிட்டதொரு வாக்காளர்தொகுதியின் அல்லது அமைப்பின் உறுப்பினர் அல்லது ஒரு குறிப்பிட்ட நியமனப் பதவியை வகிக்கிறார் என்ற தகுதியினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்கிற ஆட்சிக் குழுவின் உறுப்பினர் ஒருவர் அவர் அந்த குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் அல்லது, நேர்விற்கேற்ப, அந்த நியமனப் பதவியில் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் தேதியிலிருந்து ஆட்சிக் குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை:**—மேலும் ஆட்சிக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்தப் பதவியின் காரணமாக ஆட்சிக் குழுவின்

பதவிவழி உறுப்பினராக இருப்பதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராக இருக்கிறரோ அந்தப் பதவிகள் எதற்கேனும் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவிடத்து அவர் தரம் நியமன பொறுப்பை எடுத்துக் கொள்கிற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக தாம் தேர்ந்தெடுக்கப்பட்டதன் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக ஆட்சிக் குழுவின் உறுப்பினராகத் தாம் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புகிறாரா அல்லது அத்தகைய உறுப்பினராக இருக்கும் பதவியை விட்டு நீங்கி தம்முடைய நியமனத்தின் காரணமாகப் பதவிவழி உறுப்பினராக ஆவதற்கு விரும்புகிறாரா என்பதைத் தம்மால் கையொப்பமிடப்பட்டு துணைவேந்தருக்கு தெரிவிக்கப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக, தெரிவு செய்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய விருப்புத்தெரிவானது அறுதியானதாக இருத்தல் வேண்டும்; அந்த விருப்புத்தெரிவைச் செய்யத் தவறுவதின்பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக உள்ள தம்முடைய பதவியை விட்டு அவர் நீங்கியிருப்பதாகக் கொள்ளப்பெறுவர்.

(6) ஒருவர் ஆட்சிக் குழுவின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும்போது, அவர் ஆட்சிக் குழுவில் தமக்கிருந்த உறுப்பினர் பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழக அமைப்புகளில் ஏதிலேனும் உறுப்பினராக அவர் இருப்பதும் அற்றுப்போகும்.

(7) ஆட்சிக் குழுவின் உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படக்கூடிய நாட்படி மற்றும் பயணப்படிகள் தவிர, இப்பல்கலைக்கழகத்திடமிருந்து ஊதியம் எதையும் பெறுவதற்கு உரிமைத் தகுதியுடயைவர்கள் ஆகமாட்டார்கள்:

**வரம்புரை :–**ஆனால், இந்தக் கூறில் அடங்கியுள்ள எதுவும், உறுப்பினர் எவரையும், தாம் வகிக்கிற பதவியின் காரணமாக தாம்உரிமைத் தகுதியுடையவராயிருக்கிற தம்முடைய இயல்பான ஊதியங்களைப் பெறுவதை தடை செய்யலாகாது.

(8) ஆட்சிக் குழுவின் பதவிவழி உறுப்பினர் அல்லாத பிற உறுப்பினர் ஒருவர், தமதுபதவி முடிவடைகிற கால அளவிற்கு முன்பு எந்தச் சமயத்திலும் தம்முடைய உறுப்பினர் பதவியை விட்டு விலகலாம். அத்தகைய பதவி விலகலானது, வேந்தருக்கு அவ்வுறுப்பினரால் எழுத்துருவிலான கடிதம் ஒன்றின் மூலமாகத் தெரிவிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அப்பதவி விலகலானது, வேந்தரால் அது ஏற்கப்படும் தேதியிலிருந்து செயல்விளைவு பெறுதல் வேண்டும்.

ஆட்சிக்குழுவின் அதிகாரங்கள்.

**20.** (1) ஆட்சிக்குழுவானது பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும், அதாவது :—

(a) நிலை விதிகளை இயற்றுதல் மற்றும் திருத்தம் அல்லது அதனை நீக்கறவு செய்தல்;

(b) அவசரச் சட்டங்களை இயற்றுதல் மற்றும் திருத்தம் செய்தல் அல்லது அவற்றை நீக்கறவு செய்தல்;

(c) ஆட்சிக்குழுவானது, அது தீர்மானிக்கலாகும் அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய நோக்கங்களுக்காகவும் பிற பல்கலைக்கழகங்களுடனும் பிற கல்வி அதிகார அமைப்புகளுடனும் கல்லூரிகளுடனும் ஒத்துழைத்தல்;

(d) ஆட்சிக் குழுவானது அது, தான் தக்கதெனக் கருதுகிற அத்தகைய ஆசிரியர் கல்வியைக் கற்பித்தலுக்கும் பயிற்சிக்கும் வகை செய்தல்;

(e) ஆசிரியர் கல்வியில் ஆராய்ச்சி செய்வதற்கும், மேம்பாடு செய்வதற்கும், வகை செய்தல்;

(f) பல்கலைக்கழகத்திற்கு தேவைப்படும் விரிவுரையாளர் பதவிகள், சிறப்புப் பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள் மற்றும் பிற ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துதல்;

(g) பல்கலைக்கழகத்தோடு கல்லூரிகளை இணைப்பதற்கும் மற்றும் இணைப்பினை விலக்கிக் கொள்வதற்குமான வரைக்கட்டுகளை வகுத்துரைத்தல் மற்றும் அத்தகைய கல்லூரிகள் மற்றும் தொடர்பான கல்வியாண்டினை குறித்துரைத்தல்;

(h) கல்விமன்றமானது தீர்மானிக்கலாகும் பல்கலைக்கழக கல்லூரிகளின் மற்றும் இணைக்கப்பட்ட கல்லூரிகளின் மாணவர்களுக்காக அத்தகைய விரிவுரை வழங்குவதற்கும் மற்றும் கற்பிப்பதற்கும் வகைசெய்தல்;

(i) கல்லூரிகள் மற்றும் உணவு விடுதிகள் அனைத்தையும் ஆய்வு செய்வதற்கு வகை செய்தல்;

(j) ஆசிரியர் கல்வியில் பட்டங்கள், மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்களை ஏற்படுத்துதல்;

(k) (i) பல்கலைக்கழகக் கல்லூரி அல்லது இணைக்கப்பட்ட கல்லூரியொன்றில் ஏற்பளிக்கப்பட்ட குறித்தகாலப் படிப்பொன்றைத் தொடர்ந்திருந்து, அல்லது வகுத்துரைக்கப்பட்ட முறையில் அதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்து மற்றும் பல்கலைக்கழகத்தின் வகுத்துரைக்கப்பட்ட தேர்வுகளில் தேறியுள்ளவர்களுக்கு;

(ii) வகுத்துரைக்கப்படலாகிற நிபந்தனைகளின்படி ஆராய்ச்சியினை நடத்தியுள்ளவர்களுக்கு பட்டங்களை அளித்தல்;

(l) ஆட்சிக் குழுவின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில், கௌரவப்பட்டங்களை அல்லது கல்விச் சிறப்புப் பட்டங்களை அளித்தல்;

(m) மாணவர் விடுதிகளை நிறுவியமைத்துப் பேணிவருதல்;

(n) பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவி சம்பளங்கள், ஆதரவுப்படித் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல்;

(o) கல்லூரிகளுக்கு ஒப்புதலளிப்பதற்காகவும் இணைப்பதற்காகவும் இப்பல்கலைக்கழகத்தின் தேர்வுகள் பட்டங்கள் ஆகியவற்றுக்கு அனுமதிக்கப்படுவதற்காகவும், பட்டதாரிகளை பதிவு செய்வதற்காகவும் அத்தகைய பதிவினைப் புதுப்பிப்பதற்காகவும் மற்றும் 4–ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும் விதிக்கப்படவேண்டிய கட்டணங்களை வகுத்துரைத்தல்;

(p) ஆண்டறிக்கை, ஆண்டுக் கணக்குகள், நிதிநிலை மதிப்பீடுகள் ஆகியவற்றைப் பிரிசீலனை செய்தலும், அவற்றின் மீது தான் பொருத்தமெனக் கருதக்கூடிய நடவடிக்கையை எடுத்தலும்;

(q) பல்கலைக்கழக விரிவாக்கக்குழு ஒன்றை ஏற்படுத்தி அதைப் பேணிவருதல்.

(r) நூல்வெளியீட்டுப் பிரிவு, மாணவர் சங்கங்கள், வேலைவாய்ப்புப் பிரிவு, பல்கலைக்கழக உடற்பயிற்சிக் கழகங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி அவற்றைப்பேணி வருதல்;

(s) நிறுவனங்களில் ஏதொன்றின் மேலாண்மையை மேற்கொள்வதற்காகவும் அதன் சொத்துக்களையும் கட்டுப்பாடுகளையும் எடுத்துக் கொள்வதற்காகவும் அல்லது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாகயிராத பிற நோக்கங்கள் எவற்றிற்காகவும் மைய அரசு அல்லது மாநில அரசு எதனுடன் அல்லது தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை எதையும் செய்துகொள்ளுதல்;

(t) பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளுக்கான தேர்தல் முறையையும், கல்விமன்றம், ஆட்சிக்குழு மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புகள் ஆகியவற்றின் கூட்ட நடைமுறையையும், பல்கலைக்கழகத்தின் கல்விமன்றம் அல்லாத பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளினால் அலுவல் நடத்தப்பெறுவதற்குத் தேவைப்படும் உறுப்பினர்களின் குறைவெண் வரம்பினையும் முறைப்படுத்துகின்ற நிலை விதிகளைச் செய்தல்;

(u) பல்கலைக்கழகத்தின் சொத்துக்களையும் நிதியங்களையும் வைத்துவருதல், கட்டுப்பாடு செய்தல், நிருவகித்து வருதல்;

(v) பல்கலைகழகத்தின் தனித்த இலச்சினையின் வடிவம், அதைப் பாதுகாப்பில் வைத்திருப்பது, பயன்படுத்துவது ஆகியவை குறித்து பணித்தல்;

(w) இந்தச் சட்டத்திற்கும், நிலை விதிகளுக்கும் அவசர விதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கிய வகையில், பல்கலைக்கழகம் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளையும் முறைப்படுத்துதலும் முடிவு செய்தலும்;

(x) திட்டவட்டமான நோக்கங்களுக்காக, இப்பல்கலைக்கழகத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ள சொத்துகள், நிதியங்கள் ஆகிய அனைத்தையும் நிருவகித்தல்;

(y) (i) பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள், பல்கலைக்கழக சிறப்புப் பேராசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆகியோரை நியமித்தல், அவர்களுடைய ஊதியங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை நிர்ணயம் செய்தல். அவர்களுடைய கடமைகளையும் அவர்களது பணிகள் குறித்த வரைக்கட்டுகளையும் வரையறுத்தல் மற்றும் தற்காலிக காலியிடங்களை நிரப்புவதற்கு வகைசெய்தல்;

(ii) நிருவாக மற்றும் அதுபோன்ற பிற பதவிகளுக்கான நியமன முறையைவகுத்துரைத்தல், மற்றும் அவற்றின் ஊதியங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை நிர்ணயித்தல், அவற்றினுடைய கடமைகளையும் அவற்றின் பணி நிபந்தனைகளையும் வரையறுத்தல் மற்றும் தற்காலிகக் காலி இடங்களை நிரப்புவதற்கு வகை செய்தல்;

(z) பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள், பல்கலைக்கழக சிறப்புப் பேராசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற பணியாளர்கள் ஆகியோரைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்தல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்.

(aa) பல்கலைக்கழகத்திடம், அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் எவையேனும், நிலைக்கொடைகள், விருப்ப ஆவண வழிக்கொடைகள், நன்கொடைகள், மானியங்கள் மற்றும் உரிமை மாற்றங்கள் மூலமாக அளிக்கப்படும்போது அவற்றை பல்கலைக்கழகத்தின் சார்பாக ஏற்றுக் கொள்ளுதல்;

(ab) (i) மைய அல்லது மாநில அரசு எதனிடமிருந்தும் அல்லது பொதுமக்களிடமிருந்து அல்லது மைய அல்லது மாநில அரசு எதற்கேனும் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள கழகம் எதனிடமிருந்தும், பல்கலைக்கழகத்தின் சார்பாகக் கடன்களைப் பெறுதல்;

(ii) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக பல்கலைக்கழகச் சொத்தின் பிணையத்தின்பேரில், அரசின் ஒப்புதலளிப்புடன் பணத்தைக் கடன் வாங்குதல்;

(ac) பல்கலைக்கழகத்தின் பரப்பிடத்திற்குள் உள்ள கல்லூரிகளை பல்கலைக்கழகத்துடன் இணைத்திடல்;

(ad) பல்கலைக்கழகத்தால் பேணிவரப்படாத மாணவர் விடுதிகளுக்கு ஏற்பிசைவளித்தல் மற்றும் அவசர விதிகளுக்கிணங்கவும் அதன்படி விதிக்கப்பட்ட வரைக்கட்டுகளுக்கிணங்கவும் நடத்தப்பெறாத மாணவர் விடுதி எதனின் ஏற்பிசைவையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் அல்லது விலக்கிக் கொள்ளுதல்;

(ae) பல்கலைக்கழகக் கல்லூரிகள், இணைக்கப்பட்ட கல்லூரிகள், மாணவர் விடுதிகள் ஆகிய அனைத்தையும் ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்தலும் ஆய்வு செய்யப்பணித்தலும்;

(af) பல்கலைக்கழகக் கல்லூரிகள், மாணவர் விடுதிகள் ஆகியவற்றிலுள்ள ஆசிரியர்களின் தகுதிப்பாடுகளை வகுத்துரைத்தல்;

(ag) பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்பு உதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவிச் சம்பளங்கள், ஆதரவு படித்தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை நிலைவிதிகளுக்கிணங்க வழங்குதல்;

(ah) வகுத்துரைக்கப்படக் கூடிய கட்டணங்களை விதித்தலும் வசூலித்தலும்;

(ai) பல்கலைக்கழகத் தேர்வுகளை நடத்துதலும் அவற்றின் முடிவுகளுக்கு ஒப்பதலளித்து வெளியிடுதலும்;

(aj) பல்கலைக்கழகத்தில் மாணவர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பாக அல்லது பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குச் சமமாய் இருப்பதாக ஏற்பிசைவு அளிக்கப்படுவதற்கான தேர்வுகளை வகுத்துரைக்கின்ற அவசர விதிகளைச் செய்தல்;

(ak) பாடக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமித்தல்.

(al) (i) பாடக்குழுக்களின் பரிந்துரையைப் பரிசீலனை செய்ததற்குப் பின்பு, தேர்வாளர்களை நியமிப்பது; மற்றும்

(ii) அவர்களுடைய ஊதியங்களை நிர்ணயித்தல் ;

(am) பல்கலைக்கழகத் துறைகளைச் சார்ந்த மாணவர்கள் தங்கியிருக்கும் இடத்தையும் மாணவர்களின் ஒழுங்கு நடத்தையையும் கண்காணித்துக் கட்டுப்பாடு செய்தலும், அவர்கள் உடல் நலமும் பொது நலமும் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(an) பல்கலைக்கழக மையங்கள், பல்கலைக்கழகக் கல்லூரிகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி மேலாண்மை செய்தல்;

(ao) பல்கலைக்கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளை மேலாண்மை செய்தல்;

(ap) பல்கலைக்கழக விரிவாக்க குழுவின் செயற்பாட்டை முறைப்படுத்துதல்;

(aq) பல்கலைக்கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட நூல்வெளியீட்டுப் பிரிவு, மாணவர் சங்கங்கள், வேலைவாய்ப்பு பிரிவு, பல்கலைக்கழக உடற்பயிற்சி கழகங்கள் ஆகியவற்றை மேலாண்மை செய்தல்;

(ar) பல்கலைக்கழகத்தில் கற்பித்தலையும் பயிற்றுவித்தலையும் மறு ஆய்வு செய்தல்;

(as) பல்கலைக்கழகத்திற்குள் ஆராய்ச்சியை வளர்த்தலும், அத்தகைய ஆராய்ச்சி பற்றி அவ்வப்போது அறிக்கைகளைக் கோருதலும்;

(at) சட்டத்தினாலோ, அல்லது நிலை விதிகளினாலோ, அவசர விதிகளினாலோ அல்லது ஒழுங்குமுறை விதிகளினாலோ தனக்கு வழங்கப்படக்கூடிய அல்லது விதிக்கப்படக்கூடிய பிற அதிகாரங்களை செலுத்துதலும், பிற கடமைகளை புரிந்து வருதலும்; மற்றும்

(au) தன் அதிகாரங்களில் எதையும் துணைவேந்தருக்கோ தன் உறுப்பினர்களுக்கிடையேயிருந்து அமைந்த குழுவொன்றிற்கோ அல்லது நிலை விதிகளுக்கிணங்க நியமிக்கப்பட்ட குழுவொன்றிற்கோ ஒப்படைவு செய்யலாம்;

(2) ஆட்சிக்குழு, பொருட்பாடு எதனைப் பொருத்தும் கல்விமன்றத்தை கலந்தாய்வது தேவையானதென்று தான்கருதுகிறவிடத்து அவ்வாறு கலந்தாய்வு செய்யலாம்.

**21.** (1) ஆட்சிக்குழுவானது, குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையேனும் வகுத்துரைக்கப்படக்கூடிய காலங்களிலும், இடங்களிலும் கூடுதல் வேண்டும், மற்றும் (2), (3) ஆகிய உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, தன் கூட்டங்களின் குறைவெண் வரம்பு உள்ளடங்கலாக, அக்கூட்டங்களில் அலுவல் நடத்துவது தொடர்பாக, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்; ஆட்சிக்குழுவின் கூட்டங்கள்.

(2) துணைவேந்தர் அல்லது அவர் வராதபோது வந்திருக்கும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எவரேனும், ஆட்சிக்குழுவின் கூட்டமொன்றுக்கு தலைமை வகிப்பார்;

(3) ஆட்சிக்குழுவின் கூட்டம் எதிலும் எழும் அனைத்து கேள்விகளும், வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் வாக்குகளின் பெரும்பான்மையினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும். மற்றும் வாக்குகள் சமமானவையாக அமைகின்ற நேர்வில் துணைவேந்தரோ அல்லது நேர்விற்கேற்ப தலைமை வகிக்கின்ற உறுப்பினரோ, இரண்டாவது அல்லது அறுதி வாக்கு ஒன்றைப் பெற்றிருத்திலும் அதை செலுத்துதலும் வேண்டும்;

(4) (a) ஆட்சிக்குழு, கலந்தாய்வு செய்யும் நோக்கத்திற்காக, பரிசீலனையில் உள்ள பொருள் எதிலும் சிறப்பு அறிவையோ, அல்லது நடைமுறைப் பட்டறிவையோ பெற்றிருக்கின்ற எவரையும் கூட்டம் எதற்கும் வருகை தருமாறு அழைப்பு விடுக்கலாம். அத்தகையவர் அத்தகைய கூட்டங்களில் பேசலாம், மற்றும் மற்றபடி நடவடிக்கைகளில் பங்கேற்கலாம்; ஆனால் வாக்களிப்பதற்கு உரிமை தகுதியுடையவராகமாட்டார்;

(b) அவ்வாறு அழைக்கப்பட்டவர் ஆட்சிக் குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு அனுமதிக்கத்தக்கதான, நாட்படி மற்றும் பயணப்படிகளுக்கு உரிமைத் தகுதியுடையவராய் இருப்பார்;

**22.**(1) கல்வி மன்றமானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:– கல்வி மன்றம்.

### வகை–I–பதவி வழி உறுப்பினர்கள்

(a) துணைவேந்தர்;

(b) புலங்களின் தலைவர்கள்;

(c) அரசின் இரண்டு உறுப்பினர்கள் மற்றும் சுழற்சி முறையில் அரசால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலிருந்து எட்டு உறுப்பினர்கள்.

### வகை II–பிற உறுப்பினர்கள்

(a) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில், பல்கலைக்கழக பேராசிரியர்களிடமிருந்து வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எட்டு உறுப்பினர்கள்;

(b) சுழற்சி முறையில் அரசின் பரிந்துரைகளின்பேரில், உதவிபெறாத இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களிடையேயிருந்து வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பதினைந்து உறுப்பினர்கள்;

(c) அரசின் பரிந்துரைகளின்பேரில், கல்வி, ஆராய்ச்சி மற்றும் கல்வி நிருவாகம் தொடர்பான பொருட்பாடுகளில் செயல் திறமை வாய்ந்த வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று கல்வியாளர்கள்;

(d) துணை வேந்தரின் பரிந்துரைகளின்பேரில், வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உயர் சிறப்புவாய்ந்த மூன்று நபர்கள்;

(e) மேலே உள்ள இனங்கள் எவற்றிலும் உள்ளடக்கப்படாத ஆட்சிக்குழுவின் உறுப்பினர்கள்:

**வரம்புரை:–** ஆனால், மேலும் கூட்டத்தில் பாடக்குழுவொன்றின் தலைவர் எவரையும் அவர்தம் சிறப்பு அறிவானது கலந்துரையாடலின் இனங்களுக்குத் தொடர்புடையதாக இருக்குமேயானால், அவரை கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கலாம்.

(2) (i). (1)–ஆம் உட்பிரிவின் பிற உறுப்பினர்கள் எனும் II எனும் கூறின்கீழ் (e) எனும் இனத்தின் பொருட்டு கல்விமன்றத்தின் உறுப்பினராக உள்ள உயர்கல்வித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ, அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது பள்ளிக்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ, கல்வி மன்றத்தின் கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது இருக்கும் நேர்வில் அவர் தன்னுடைய துறையில் அரசின் துணைச் செயலாளரின் படிநிலைக்கு குறையாத அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுப்பி வைக்கலாம்;

(3) (a) பிறவாறு வகைசெய்யப்பட்டிருந்தால் தவிர, தேர்வு செய்யப்பட்ட மற்றும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட கல்வி மன்றத்தின் உறுப்பினர், மூன்றாண்டுக் கால அளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய உறுப்பினர் மற்றுமொறு மூன்றாண்டுகள் கால அளவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ உரிமைத் தகுதி உடையவர் ஆவார்.

(b) உறுப்பினர் ஒருவர் கல்விமன்றத்தின் தற்செயல் காலியிடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்குமிடத்து அத்தகைய உறுப்பினர் எவராலும் ஓராண்டுக்கு குறையாமல் வகித்து வரப்பட்ட பதவிக்கால அளவானது முழுமையான மூன்றாண்டுகள் கொண்ட கால அளவாக கருதப்படுதல் வேண்டும்:

**முதலாம் வரம்புரை.—**ஆனால், குறிப்பிட்டதொரு வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் உறுப்பினர் அல்லது ஒரு குறிப்பிட்ட நியமனப் பதவியை வகிக்கிறார் என்ற தகுதியினால் கல்விமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருக்கிற ஓர் உறுப்பினர், அவர் அந்தக் குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் அல்லது நேர்விற்கேற்ப அந்த நியமனப் பதவியில் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் தேதியிலிருந்து கல்விமன்றத்தின் உறுப்பினராக இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை.—**கல்விமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்தப் பதவியின் காரணமாக கல்விமன்றத்தின் **பதவிவழி** உறுப்பினராக இருப்பதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராக இருக்கிறாரோ அந்தப்பதவிகள் எதற்கேனும் தற்காலிகமாக நியமிக்கப்படுகிற விடத்து அவர் தாம் நியமன பொறுப்பை எடுத்துக் கொள்கிற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக தாம் தேர்ந்து எடுக்கப்பட்டதன் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக கல்விமன்றத்தின் உறுப்பினராகத் தாம் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புகிறாரா அல்லது அத்தகைய உறுப்பினராக இருக்கும் பதவியை விட்டு நீங்கி தம்முடைய நியமனத்தின் காரணமாகப் பதவி வழி உறுப்பினராக ஆவதற்கு விரும்புகிறாரா என்பதைத் தம்மால் கையொப்பமிடப்பட்டு துணை வேந்தருக்கு தெரிவிக்கப் பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக தெரிவு செய்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய விருப்பத்தெரிவானது அறுதியானதாக இருத்தல் வேண்டும். அந்த விருப்பத் தெரிவைச் செய்யத் தவறுவதின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக உள்ள தம்முடைய பதவியை விட்டு அவர் நீங்கியிருப்பதாகக் கொள்ளப் பெறுவர்.

(4) நபரொருவர், கல்விமன்றத்தின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும்போது அவர் கல்விமன்றத்தில் தமக்கிருந்த உறுப்பினர் பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழக அதிகார அமைப்புகள் எதிலேனும் உறுப்பினராக அவர் இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும்.

(5) கல்விமன்றத்தின் உறுப்பினர்கள் வகுத்துரைக்கப்படலாகிற நாட்படிகள் மற்றும் பயணப்படிகள் தவிர இப்பல்கலைக்கழகத்திலிருந்து ஊதியம் எதனையும் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆகார்:

**வரம்புரை.—**இந்த உட்பிரிவில் உற்ற எதுவும், உறுப்பினர் எவரும் தாம் வகிக்கிற பதவியின் காரணமாகத் தாம் உரிமைத் தகுதியுடையவராயிருக்கிற தன்னுடைய தமது இயல்பான ஊதியங்களைப் பெறுவதைத் தடை செய்தல் ஆகாது.

(6) பதவிவழி உறுப்பினர் அல்லாத கல்விமன்றத்தின் ஓர் உறுப்பினர், தமது பதவிக்காலம் முடிவதற்கு முன்பு எந்த நேரத்திலும் தமது உறுப்பினர் பதவியிலிருந்தான பதவி விலகலைக் கொடுக்கலாம்; அத்தகைய பதவி விலகலானது அவ்வுறுப்பினரால் எழுத்துருவிலான கடிதமொன்றின் வாயிலாக வேந்தருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அப்பதவி விலகலானது, வேந்தரால் அது ஏற்கப்படும் தேதியிலிருந்து செயல்விளைவு பெறுதல் வேண்டும்;

கல்விமன்றத்தின் அதிகாரங்களும் அலுவல்களும்.

**23.** (1) கல்விமன்றத்தின் பல்கலைக் கழகத்தின் முதன்மையான கல்வி அமைப்பாக இருந்துவரும்; மற்றும் இந்தச் சட்டத்தின் மற்றும் நிலைவிதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு இப்பல்கலைக்கழகத்தில் பயிற்றுவித்திருக்கும் தேர்வுக்குமான கட்டுப்பாட்டினையும் பொது ஒழுங்குமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். அவற்றின் தரநிலைகள் பேணிவரப்படுவதற்குப் பொறுப்பினை உடையதாக இருத்தல் வேண்டும். மேலும் இப்பல்கலைக்கழகத்தின் பரவலான கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் மறு ஆய்வு செய்யும் அமைப்பாகவும் கூட செயற்படுதல் வேண்டும்.

(2) கல்விமன்றமானது, பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருப்பதுடன் இப்பல்கலைக்கழகத்தின் முதன்மைக் கல்வி அமைப்பாகவும் செயலாற்றுதல் வேண்டும்:—

(a) கற்பித்தல் மற்றும் பிற கல்வித் திட்டங்கள் மீது பொதுவான ஆளுகை அதிகாரத்தைச் செலுத்தி, அதன் தரங்களைப் பேணுதலும் உயர்த்துதலும்;

(b) ஒழுங்குமுறை விதிகளைச் செய்தல்; அவற்றைத் திருத்துதல் அல்லது நீக்கம் செய்தல்;

(c) (i) பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக மற்றும் அனுமதிக்கப்படவிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) பட்டங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள், ஆகியவற்றுக்கான தொடர் கோவைப் படிப்பு குறித்து; மற்றும்

(iii) தேர்வுகளை நடத்துதல், கல்வித் தரங்களைப் பேணுவதும் உயர்த்துவதும் குறித்து;

(iv) பிற பல்கலைக்கழகங்களின் சமமான தேர்வுகளையும் பட்டங்களையும் வகுத்துரைத்தல்;

(v) மாணவர் செயல்திறனை மதிப்பீடு செய்தல், சீர்தூக்கிப் பார்த்தல் மற்றும் தரப்படுத்துதல்,

குறித்து ஒழுங்குமுறை விதிகளை செய்தல்;

(d) நூலகங்களைக் கட்டுப்பாடு செய்து பேணுதல் உள்ளிட்ட அனைத்து கல்வி சார்ந்த பொருள்களிலும், ஆட்சிக் குழுவிற்கு அறிவுரை கூறுதல்;

(e) பேராசிரியர், சிறப்புப் பேராசிரியர், விரிவுரையாளர் பதவிகளுடன் ஆய்வு ஆசிரியர் உள்ளடங்கலான ஆசிரியப் பதவிகளை நிறுவுவதற்கும், அப்பதவிகளுக்குரிய கடமைகள் மற்றும் ஊதியங்கள் குறித்து ஆட்சிக்குழுவுக்கு பரிந்துரை செய்தல்;

(f) பயிற்றுவித்தல் மற்றும் ஆய்வுத் துறைகளை அமைக்கவும், மாற்றியமைக்கவுமான திட்டங்களை உருவாக்குதல், மாற்றியமைத்தல், திருத்தியமைத்தல்:

(g) முதுநிலைக் கல்விக்கான பயிற்றுவிப்பு, ஆய்வு குறித்து ஆட்சிக்குழுவுக்குப் பரிந்துரைகளைச் செய்தல்;

(h) பல்கலைக்கழகத்தில் கற்பிப்பதற்கான கல்வித் தகுதிகள் குறித்து ஆட்சிக் குழுவுக்கு பரிந்துரைகளைச் செய்தல்;

(i) கௌவர பட்டங்கள் அல்லது பிற சிறப்பு பட்டங்கள் வழங்குவது குறித்து ஆட்சிக் குழுவுக்கு பரிந்துரை செய்தல்;

(j) விதிகள் வகுத்தல், ஒழுங்கு விதிமுறைகள், பாடத்திட்டம் மற்றும் மதிப்பீட்டு முறைகள், புதிய பாடப்பிரிவுகளை அறிமுகம் செய்தல் இருக்கின்ற பாடங்களை மாற்றியமைத்தல் ஆகியவை குறித்த பாடக்குழுவின் கருத்துருக்களை மறு ஆய்வு செய்து செயல்படுத்துதல்;

(k) ஆதரவு ஊதியம், உதவித் தொகை ஆகியவை நிறுவுவது குறித்து ஆட்சிக் குழுவிற்கு பரிந்துரை செய்தல்;

(l) துணைவேந்தருக்கோ அல்லது கல்வி மன்றத்தின் ஏதேனும் ஒரு குழுவிற்கோ அதன் அதிகாரங்களில் எதனையும் ஒப்படைவு செய்தல்;

(m) ஒவ்வொரு துறைக்கும் தேவையான இட வசதி, கருவிகள், சாதனங்கள் நூலகம் பேணுகை மேலும் பிற இயற்பொருள் சார்ந்த வசதிகள் குறித்த தரத்தினை மதிப்பீடு செய்து பரிந்துரைத்தல்;

(3) இச்சட்டத்தின் பிற வகைமுறைகளுக்குட்பட்டு, மறு ஆய்வு செய்யும் திறன் கொண்ட அமைப்பு என்ற வகையில் கல்விமன்றம் பின்வரும் அதிகாரங்களையும், அலுவற்பணிகளையும் கொண்டிருக்கும் அதாவது:—

(a) பல்கலைக்கழகத்தின் பரவலான கொள்கைகளையும் செயல்பாடுகளையும் அவ்வப்போது மறு ஆய்வு செய்து பல்கலைக்கழக முன்னேற்றம், மேம்பாட்டிற்கான வழிமுறைகளை கூறுதல்;

(b) ஏதாவது பொருள் குறித்து பல்கலைக்கழக வேந்தருக்கு ஆலோசனை அளிக்கக் கோரும்போது அவ்வாறு ஆலோசனை அளித்தல்;

(c) நிலைமுறை விதிகளில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களை செலுத்துதல் மற்றும் அலுவற்பணிகளை ஆற்றுதல்;

கல்விமன்றத்தின் கூட்டங்கள்.

**24.** (1) கல்விமன்றம், துணை வேந்தரால் நிர்ணயிக்கப்படும் தேதிகளில் ஆண்டு ஒவ்வொன்றிலும் குறைந்தது இருமுறையாவது கூடுதல் வேண்டும் அவற்றில் ஒன்று ஆண்டுக் கூட்டமென வழங்கப்படுதல் வேண்டும். கல்விமன்றமானது அது, அவ்வப்போது தீர்மானிக்கக்கூடிய அத்தகைய பிற காலங்களிலும்கூட கூடலாம்.

(2) கல்விமன்றக் கூட்டமொன்றுக்குத் தேவைப்படக்கூடிய குறைவெண் வரம்பு என்பது, கல்விமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்காக இருத்தல் வேண்டும்:

**வரம்புரை.—**ஆனால், அத்தகைய குறைவெண் வரம்பு இப்பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பிற்கோ அல்லது பட்டங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகளை வழங்கும் நோக்கத்திற்காக நடத்தப்படும் கல்விமன்றக் கூட்டமொன்றிற்கோ தேவை இல்லை.

(3) துணை வேந்தர் பொருத்தமென்று தாம் கருதுகிறபோதெல்லாம், கல்விமன்றத்தின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு ஐம்பது விழுக்காட்டிற்கு குறைவாக இராதவகையிலான உறுப்பினர்களின் எழுத்துருவிலான கோரிக்கை ஒன்றின்பேரில், கல்விமன்றத்தின் சிறப்பு கூட்டமொன்றைக் கூட்டலாம்.

நிதிக்குழு

**25.** (1) நிதிக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், அதாவது:–

(a) துணை வேந்தர்;

(b) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(d) ஆட்சிக் குழுவினால் தன்னுடைய உறுப்பினர்களுக்கிடையேயிருந்து நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களில் ஒருவர் பேராசிரியராகவும் ஒருவர் வேந்தரால் ஆட்சிக்குழுவிற்கு பெயர் குறித்து நியமிக்கப்படுபவராகவும் இருப்பார்.

(2) காரணங்கள் எதற்காகவும் நிதித்துறையின் அரசுச் செயலாளர் அல்லது உயர்கல்வித்துறையின் அரசுச் செயலாளர் நிதிக்குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலவில்லையானால் அவர்அரசின் துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத தன்னுடைய துறையின் அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கலாம்;

(3) நிதிக்குழுவிற்குத் துணை வேந்தர்; பதவி வழித்தலைவராகவும் நிதி அலுவலர் பதவிவழிச் செயலாளராகவும் இருந்து வருதல் வேண்டும்;

(4) பதவிவழி உறுப்பினர்களல்லாத நிதிக்குழுவின் மற்ற அனைத்து உறுப்பினர்களும், மூன்றாண்டுக்கால அளவிற்குப் பதவி வகித்துவருவர்;

(5) நிதிக்குழு, கணக்குகளை ஆய்வு செய்வதற்கும் செலவினத்திற்காக கருத்துருக்களைக் கூர்ந்தாய்வு செய்வதற்குமென ஒவ்வொரு ஆண்டிலும் குறைந்தது இருமுறையாவது கூடுதல் வேண்டும்;

(6) நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக ஆண்டுக்கணக்குகள், பரிசீலனைக்காகவும் கருத்துரைகளுக்காகவும் நிதிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; அதன்பின்னர் ஒப்புதலளிப்புக்காக ஆட்சிக்குழுவிற்கு பணிந்தனுப்புதல் வேண்டும்;

(7) நிதிக்குழுவானது, இப்பல்கலைக்கழகத்தின் வருமானம் மற்றும் வள ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், ஆண்டிற்கான மொத்த தொடர் செலவினம், மொத்த தொடராச் செலவினம் ஆகியவற்றின் வரம்புகளைப் பரிந்துரைத்தல் வேண்டும்;

(8) நிதிக்குழு—

(a) அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையை ஆய்வு செய்யும்;

(b) ஆண்டு நிதி மதிப்பீடுகளில் வகைமுறை எதுவும் செய்யப்பட்டிராத முதலீடு அல்லது செலவினத்தை உள்ளடக்கியுள்ள, அல்லது ஆண்டு நிதிமதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ள தொகைக்கும் மிகையாக உள்ள செலவினத்தை உள்ளடக்குகிற, கருத்துரு ஒவ்வொன்றின் பேரிலும், ஆட்சிக்குழுவுக்குப் பரிந்துரை செய்யும்;

(c) இப்பல்கலைக்கழகம், அதன் துறைகள், அதன் உறுப்பமை கல்லூரிகள் ஆகியவற்றின் கணக்குகளை வைத்து பேணி வருவதற்கான முறைகளையும், நடைமுறைகளையும் படிவங்களையும் வகுத்துரைக்கும்;

(d) இப்பல்கலைக்கழக நிதிகள் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளின்பேரிலும், ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரை செய்யும்; மற்றும்

(e) வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அலுவற் பணிகளைப் புரிந்துவரும்;

(9) நிதிஅலுவலரால் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக நிதி மதிப்பீடுகள் பரிசீலனைக்காகவும் கருத்துரைகளுக்காகவும் நிதிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; நிதிக்குழுவினால் மாற்றியமைக்கப்பட்டவாறான மேற்சொன்ன மதிப்பீடுகள், அதற்குப் பின்னர், பரிசீலனைக்காக ஆட்சிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். ஆட்சிக்குழு நிதிக்குழுவினால் செய்யப்பட்ட மாறுதல்களை ஏற்றுக் கொள்ளலாம்;

திட்டமிடும் குழு.

**26.** (1) இப்பல்கலைக்கழகத்திற்கென திட்டமிடும் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்; அது பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி குறித்து பொதுவாக ஆலோசனை நல்குதல் வேண்டும்; மேலும் அது பல்கலைக்கழகக் கல்வித்தரம் மற்றும் ஆராய்ச்சியை ஆய்வு செய்துவரும்;

(2) திட்டமிடும்குழு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், அதாவது:—

(a) துணை வேந்தர் அவர் அக்குழுவின் பதவி வழித் தலைவராக இருப்பார்; மற்றும்

(b) கல்வியில் சிறந்த எண்மருக்கு மேற்படாதவர்கள்;

(3) திட்டமிடும் குழுவின் உறுப்பினர்கள் துணை வேந்தரின் பரிந்துரையின்பேரில் வேந்தரால் நியமிக்கப்படுவர்; மற்றும் அவர் தீர்மானிக்கக்கூடிய அத்தகைட கால அளவுக்குப் பதவி வகிப்பார்;

(4) திட்டமிடும் குழு, இந்தச் சட்டத்தினால் அதனிடம் உற்றமைந்துள்ள பிற அதிகாரங்கள் அனைத்தினோடும்கூட, கல்வி அலுவல்களை எதனையும் குறித்து ஆட்சிக்குழுவிற்கும், கல்விமன்றத்திற்கும் ஆலோசனை கூறுவதற்கும் உரிமை கொண்டதாகும்.

பாடக் குழுக்கள்.

**27.** கற்பிக்கின்ற துறை ஒவ்வொன்றுடனும் இணைக்கப்பட்ட பாடக்குழுக்கள் இருத்தல் வேண்டும். பாடக்குழுக்களின் அமைப்பும் அதிகாரங்களும்; வகுத்துரைக்கப்படக்கூடியனவாக இருக்கும்;

புலங்களை அமைத்து ருவாக்குதலும் செயற்பணிகளும்.

**28.** (1) பல்கலைக்கழகமானது நோக்கங்கள் மற்றும் அதனுடைய அலுவற் பணிகளுக்காக நிலைவிதிகளால் வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய புலங்களை அமைத்துருவாக்கலாம்.

(2) புலங்களின் அமைத்துருவாக்கமும் அலுவற்பணிகளும், பிற எல்லாவகைகளிலும், நிலை விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக்கூடியனவாக இருக்கும்.

(3) புலம் ஒவ்வொன்றும், நிலை விதிகளின் மூலமாக வகுத்துரைக்கப்படக்கூடிய கற்பிக்கின்ற துறைகளைக் கொண்டிருக்கும்.

பிற அதிகார அமைப்புகளை அமைத்து ருவாக்குதல்.

29. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளென நிலைவிதிகளின் மூலம் விளம்பப்படக்கூடிய பிற அமைப்புகளின் அமைத்துருவாக்குதலும் அவற்றின் அதிகாரங்களும், வகுத்துரைக்கப்படக்கூடியனவாக இருக்கும்.

## அத்தியாயம்–V

## நிலை விதிகள் (Statutes), அவசர விதிகள் (Ordinances), ஒழுங்குமுறை விதிகள் (Regulations)

நிலைவிதிகள்.

**30.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குப்பட்டு, நிலைவிதிகள், பின்வும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ, அல்லது அவற்றும் ஏதொன்றுக்குமோ, வகை செய்யலாம்; அதாவது:–

(1) பட்டங்களை வழங்குவதற்கு, பட்டமளிப்பு விழாவை நடத்துதல்;

(2) மதிப்புறு (கௌரவப்) பட்டங்களையும் கல்விச் சிறப்புப் பட்டங்களையும் வழங்குதல்;

(3) இப்பல்கலைக்கழக அதிகார அமைப்புகளின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் அலுவற்பணிகள்;

(4) அதிகார அமைப்புகளின் உறுப்பினர்களிடையே எழும் காலியிடங்களை நிரப்புகின்ற முறை;

(5) அதிகார அமைப்புகளின் மற்றும் அவற்றில் குழுக்களின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படத்தக்க படித் தொகைகள்;

(6) அதிகார அமைப்புகளின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை; அத்தகைய கூட்டங்களில் அலுவல் நடத்துவதற்கான குறைவெண்வரம்பு (Quorum) உள்ளடங்கலாக;

(7) அதிகார அமைப்புகளின் ஆணைகள் அல்லது முடிவுகளுக்கு உறுதியொப்பமளித்தல்;

(8) இணைக்கப்பட்ட கல்லூரிகளில் கற்பிக்கின்ற துறைகளை உருவாக்குதல்;

(9) வேந்தர் மற்றும் இணைவேந்தர் அல்லாத இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர்களின் பதவிக்கால அளவும் அவர்களின் நியமன முறைகளும் மற்றும் பணி பற்றிய வரைக்கட்டுகளும்;

(10) இப்பல்கலைக்கழகத்தினால் பணியிலமர்த்தப்படும் நபர்களின் தகுதிப்பாடுகள்;

(11) இப்பல்கலைக் கழகத்தினால் பணியிலமர்த்தப்படும் நபர்களை வகைப்படுத்துதல், அவர்களின் நியமனமுறை மற்றும் அவர்களின் பணி பற்றிய வரையறைகளையும் வரைக்கட்டுக்களையும் தீர்மானித்தல்;

(12) இப்பல்கலைக்கழகத்தினால் பணியிலமர்த்தப்படும் நபர்களின் நன்மைக்காக ஓய்வூதியம், பணிக்கொடை, காப்பீடு அல்லது வருங்கால வைப்பு நிதியத்தை ஏற்படுத்துதல்;

(13) பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவிச் சம்பளங்கள், ஆதரவுப் படிப்புத் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துதலும் அவற்றை அளிப்பதற்கான வரைக்கட்டுகளும்;

(14) கூடங்கள், மாணவர் விடுதிகள், ஆகியவற்றை நிறுவியமைத்தலும், பேணி வருதலும்;

(15) கூடங்களிலும், மாணவர் விடுதிகளிலும், இப்பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருப்பதற்கான வரைகட்டுகளும் அவ்வாறு தங்கியிருப்பதற்கான கட்டணங்களையும் பிற தொகைகளையும் விதித்தலும்;

(16) இணைக்கப்பட்ட கல்லூரிகளை பல்கலைக்கழகத்தோடு இணைப்பதற்கான நிபந்தனைகள்;

(17) இப்பல்கலைக் கழக அதிகார அமைப்புகளிடம் அல்லது அலுவலர்களிடம் மேவியுள்ள அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்; மற்றும்

(18) நிலைவிதிகளின் மூலம் கோரப்படுகின்ற அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்.

நிலை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது.

**31.** (1) ஆட்சிக்குழு, அவ்வப்போது, நிலைவிதிகளைச் செய்யலாம் மற்றும் இந்தப்பிரிவில் இதன்பின்பு வகை செய்யப்பட்டுள்ள முறையில் அந்நிலை விதிகளைத் திருத்தலாம் அல்லது நீக்கலாம்.

(2) கல்விமன்றம், ஆட்சிக் குழுவிற்கு, அவ்வாட்சிக்குழுவால் நிறைவேற்றப்படவேண்டிய நிலைவிதி எதனின் அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது நீக்கம் எதனின் வரைவையும், முன்மொழியலாம், மற்றும் அத்தகைய வரைவானது ஆட்சிக்குழுவினால் அதன் அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்;

(3) ஆட்சிக்குழு, (2)—ஆம் உட்பிரிவின்படி கல்விமன்றத்தினால் முன்மொழியப்பட்ட வரைவைப் பரிசீலனை செய்யலாம்; மற்றும் அவ்வரைவை நிறைவேற்றலாம் அல்லது மறுத்துவிடலாம் அல்லது திருத்தங்களுடனோ இல்லாமலோ அதை மறுபரிசீலனைக்காகக் கல்விமன்றத்திற்கு அல்லது திருப்பியனுப்பலாம்;

(4) (a) ஆட்சிக் குழுவின் உறுப்பினர் எவரும் நிலைவிதியொன்றின் அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது அதன் நீக்கம் எதனின் வரைவையும் ஆட்கிக்குழுவிற்கு முன்மொழியலாம்; மற்றும் ஆட்சிக்குழுவானது அவ்வரைவை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது அது கல்விமன்றத்தின் அதிகாரவரம்பு எல்லைக்குள் வாராத பொருட்பாடு ஒன்றைப் பற்றியதாக இருக்குமானால் அதை மறுத்துத் தள்ளிவிடலாம்.

(b) அத்தகைய வரைவு, கல்விக்குழுவின் அதிகார வரம்பு எல்லைக்குள் இருக்கிற பொருள் ஒன்றைப்பற்றியதாக இருக்கிற நேர்வில், ஆட்சிக்குழு, அதைப் பரிசீலனை செய்வதற்காகக் கல்விகுழுவிற்குக் குறித்தனுப்புதல் வேண்டும்; அக்குழு அவ்வரைவிற்குத் தான் ஒப்புதலளிக்கவில்லை என்று ஆட்சிக்குழுவிற்கு அறிவிக்கலாம்; அல்லது கல்விக்குழு ஒப்புதலளிக்கக்கூடிய வடிவில் ஆட்சிக்குழுவிற்கு அவ்வரைவைத் பணிந்தனுப்பலாம்; மேலும், அவ்வாட்சிக் குழு அவ்வரைவைத் திருத்தங்களுடனோ, இல்லாமலோ நிறைவேற்றலாம் அல்லது மறுத்துத் தள்ளிவிடலாம்;

(5) ஆட்சிக் குழுவினால் நிறைவேற்றப்பட்ட நிலைவிதி ஒன்று அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது நீக்கமானது, வேந்தருக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். அவர் அதற்கு இசைவு அளிக்கலாம் அல்லது தாம் இசைவு அளிப்பதை மறுத்து நிறுத்தி வைக்கலாம். ஆட்சிக் குழுவினால் நிறைவேற்றப்பட்ட நிலைவிதி ஒன்று அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது நீக்கமானது, வேந்தரால் அதற்கு இசைவளிக்கப்பட்டிருக்கின்ற வரையிலும், செல்லுந்தன்மையைப் பெறாது இருத்தல் வேண்டும்.

அவசர விதிகள்

**32.** இந்தச் சட்டத்தின் மற்றும் நிலை விதிகளில் வகை முறைகளுக்குட்பட்டு, அவசரவிதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கேனும் வகை செய்யலாம் அதாவது:—

(a) கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் கட்டணங்களை விதித்தல்;

(b) இப்பல்கலைக்ககழகத்தின் அனைத்துப் பட்டங்கள், பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழி செய்கின்ற குறித்தகாலப் படிப்புப் பிரிவுகள்;

(c) மாணவர்களின் இருப்பிடத்திற்கான நிபந்தனைகள் மற்றும் மாணவர் விடுதிகளில் தங்கி இருப்பதற்கான கட்டணங்களை விதித்தல்;

(d) இப்பல்கலைக்கழகத்தினால் பேணி வரப்படாத மாணவர் விடுதிகளுக்கு ஏற்பிசைவு வழங்குவதற்கான நிபந்தனைகள்;

(e) எந்த வரைக்கட்டுகளின்படி, இப்பல்கலைக்கழகப் பட்டங்கள், பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றை பெறுவதற்கு வழி செய்கின்ற குறித்த காலப் படிப்புப் பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பது;

(f) இப்பல்கலைக் கழகத்தின் தேர்வுகளை நடத்துதலும் எந்த வரைக்கட்டுகளின் பேரில் அத்தைகய தேர்வுகளுக்கு மாணவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதும்;

(g) தேர்வுகளுக்கு மாணவர்களை ஏற்றுக் கொள்வது தொடர்பாக எந்த முறையில் விலக்கு அளிக்கப்படலாம் என்பது;

(h) தேர்வு அமைப்புகளின் மற்றும் தேர்வாளர்களின் வரைக்கட்டுகள் மற்றும் நியமன முறையில் அவர்களுடைய கடமைகள்;

(i) இப்பல்கலைக்கழக மாணவர்களிடையே ஒழுக்கத்தைப் பேணி வருதல்;

(j) குறித்த காலப் படிப்புப் பிரிவு, ஆராய்ச்சி பரிசோதனை மற்றும் நடைமுறைப்பயிற்சி ஆகியவற்றிற்காகவும் இப்பல்கலைக் கழகத்தின் பட்டங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றிற்கான தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்வதற்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்;

(k) ஆசிரியர்களின் தகுதிப்பாடுகளும் சம்பளங்களும்;

(l) இதன்பின்பு நிரந்தரமாக பணியில் அமர்த்தப்படும் நபர்கள் இணைக்கப்பட்ட கல்லூரிகளிலும் மாணவர் விடுதிகளிலும் கற்பிக்க தகுதிவாய்ந்தவர்களாக எந்த நிபந்தனைக்குட்பட்டு ஏற்பளிக்கப்படலாம் என்பது; மற்றும்

(m) இந்தச் சட்டத்தினாலோ, நிலைவிதிகளினாலோ செய்யப்பட வேண்டியதாக உள்ள அல்லது அவசர விதி ஒன்றினால் வகுத்துரைக்கப்படக் கூடிய பிற பொருட்பாடு எதுவும்;

அவசரவிதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது.

**33.** (1) இந்தப் பிரிவில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறு தவிர, கல்விமன்றத்தினால் அவசர விதிகள் செய்யப்படுதல் வேண்டும்.

(2) கல்விமன்றத்தால் செய்யப்பட்ட அவசரவிதிகள் அனைத்தும், கல்விமன்றத்தால் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய தேதியிலிருந்து செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட அவசரவிதி ஒவ்வொன்றும் அது செய்யப்பட்டதற்குப் பின்னர் கூடிய விரைவில் ஆட்சிக் குழுவிற்கு பணிந்தனுப்பப்பட வேண்டும்; மற்றும் ஆட்சிக்குழு தனது அடுத்தக் கூட்டத்தில் அதனை பரிசீலனை செய்தல் வேண்டும்.

(3) ஆட்சிக்குழுவானது, அத்தகைய கூட்டத்தில் வருகைதந்திருக்கும் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாத பெரும்பான்மை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால், அத்தகைய அவசரவிதியை மாற்றியமைக்கவோ, அல்லது நீக்கவோ அதிகாரம் கொண்டதாகும். மற்றும் அவ்வாறான அவசரவிதி அவ்வாறான தீர்மானத்தின் தேதியிலிருந்து அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டவாறான வடிவத்தில் செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும். அல்லது நேர்வுக்கேற்ப, அத்தகைய அவ்வாறு செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

ஒழுங்குமுறை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது.

**34.** (1) ஆட்சிக்குழுவும், கல்விமன்றமும், இந்தச்சட்டத்தின், நிலைமுறை விதிகளின், அவசர விதிகளின் மூலமாக வகை செய்யப்படவேண்டிய பொருட்பாடுகள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றுள் ஏதொன்றுக்காகவும் மற்றும் அத்தகைய அதிகார அமைப்பு குறித்ததாக மட்டுமே இருக்கின்ற பிற பொருட்பாடு எதற்காகவும் இந்தச்சட்டத்தின், நிலைமுறை விதிகளின் மற்றும் அவசர விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையிலான ஒழுங்கு முறை விதிகளை இயற்றலாம்.

(2) அத்தகைய ஒழுங்கு முறை விதிகள் அனைத்தும், ஆட்சிக்குழுவோ அல்லது நேர்விற்கேற்ப, கல்விமன்றமோ இதன்பொருட்டு குறிக்கக்கூடிய அத்தகைய தேதியிலிருந்து செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்.

(3) (1)–ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அதிகார அமைப்புகள் ஒவ்வொன்றும், அதன் உறுப்பினர்களுக்கு கூட்டத் தேதி குறித்தும், கூட்டங்களில் பரிசீலிக்கப்படவேண்டிய அலுவல்கள் குறித்தும் மற்றும் கூட்டங்களின் நடைமுறைக் குறிப்புகளை வைத்துவருவது குறித்தும் உறுப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுப்பதற்கு வகை செய்கின்ற ஒழுங்குமுறை விதிகளை இயற்றுதல் வேண்டும்.

(4) ஆட்சிக்குழு, இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட ஒழுங்கமுறை விதியில், திருத்தத்தை அது குறித்துரைக்கும் வகையில் அமைக்கவோ அல்லது அதன்படி தான் இயற்றிய அல்லது கல்விமன்றம் இயற்றிய ஒழுங்குமுறை விதியினை நீக்கவோ பணிக்கலாம்.

## அத்தியாயம்–VI

### மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும் அவர்களின் தங்குமிடமும்.

பல்கலைக்கழக குறித்தகால படிப்புப் பிரிவுகளுக்கு சேர்த்துக் கொள்ளுதல்.

**35.** (1) இப்பல்கலைகழகம், இச்சட்டத்தின் வகைமுறைகளுக்கும் நிலைமுறை விதிகளுக்கும் உட்பட்டு, அனைவருக்கும் கல்வியளிக்கும்.

(2) (1)–ஆம் உட்பிரிவில் கண்டுள்ள எதனாலும் பல்கலைக்கழகம் செய்யத் தேவையற்றது:–

(a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியில்லாத அல்லது கல்வித் தரத்தினைப் பெற்றிராத நபர் எவரையும் எந்தப் படிப்புக்கும் சேர்த்தல்

(b) பட்டம் அல்லது பிற கல்விச் சிறப்புகள் வழங்க தேவையான குறைந்த அளவு தரத்திற்கும் கீழேயுள்ள எம்மாணவரையும் பல்கலைக்கழக பட்டியலில் வைத்திருத்தல், அல்லது

(c) பல்கலைக்கழகத்தின் நலனுக்கோ அல்லது இதர மாணவர் மற்றும் ஆசிரியரின் உரிமைகள் சிறப்புரிமைகளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளும் எவரையும் சேர்த்தல் அல்லது எம்மாணவரையும் வைத்திருத்தல்;

(3) பல்கலைக்கழக தேர்வு ஒன்றிற்காகத் தேர்வுநாடுகிற (candidate) ஒருவர், கல்வி மன்றத்தின் பரிந்துரையின்பேரில் ஆட்சிக் குழுவினால் செய்யப்படும் தனி ஆணை ஒன்றின் மூலமாக இந்த (2)–ஆம் உட்பிரிவின் வகை முறைகளிலிருந்து அவர் விலக்களிக்கப்பட்டிருந்தாலன்றி, இணைக்கப்பட்ட கல்லூரியொன்றின் உறுப்பினரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்தகைய விலக்களிப்பு எதுவும், ஆட்சிக்குழு பொருத்தமென நினைக்கக்கூடிய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டுச் செய்யப்படலாம்.

(4) (2)–ஆம் உட்பிரிவின் வகைமுறைகளிலிருந்து பட்டமொன்றுக்கான குறித்த காலப் படிப்புப் பிரிவு அல்லாத பிற குறித்த காலப் படிப்புப் பிரிவுகளுக்கு வகுத்துரைக்கப்படும் வரைகட்டுகளுக்கிணங்க சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களும், இப்பல்கலைக்கழகத்தின் கல்லூரி சாரா மாணவர்களாக இருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்ளுதல்.

**36.** தேர்வுநாடுபவர் எவரும் இணைக்கப்பட்ட கல்லூரியொன்றின் உறுப்பினரொருவராக அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தாலன்றியும் மற்றும் அதற்கான ஒழுங்குமுறை விதிகளின்படி தேவைப்படும் வருகைப் பதிவுகுறித்த தேவைப்பாடுகளை நிறைவு செய்திருந்தாலன்றியும், அல்லது வகுத்துரைக்கப்பட்ட ஒழுங்கு முறை விதிகளின்படி செய்யப்பட்ட கல்வி மன்றத்தின் ஆணை ஒன்றின் மூலமாக, அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுவது அல்லது வருகைப்பதிவு குறித்த அல்லது இரண்டையும் குறித்த தேவைப்பாடுகளிலிருந்து அவருக்கு விலக்களிக்கப்பட்டிருந்தாலன்றி, பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது. இந்தப் பிரிவின்படி வழங்கப்படும் விலக்களிப்புகளானவை, ஆட்சிக்குழு பொருத்தமென நினைக்கக்கூடிய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டவையாயிருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு தகுதியுடையதாக ஆக்கப்படுகின்ற வருகைப் பதிவு.

**37.** இப்பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்டது அல்லது அதனுடன் இணைக்கப்பட்டது அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பட்டது அல்லாத பிற கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதிலும் கல்வி கற்பிக்கப்படுவதன் போதான வருகைப் பதிவு எதுவும், இப்பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையதாக ஆக்காது.

தங்குமிடங்களும் மாணவர் விடுதிகளும்.

**38.** இப்பல்கலைக்கழகத்தின், கல்லூரி சாரா மாணவரல்லாத பிற மாணவர், ஒவ்வொருவரும், மாணவர் விடுதியொன்றிலோ அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற வரைக்கட்டுகளின்படியோ தங்குமாறு கோரப்படல் வேண்டும்.

## அத்தியாயம்–VII

### பல்கலைக்கழக நிதியங்கள்

பொது நிதியங்கள்.

**39.** இப்பல்கலைக்கழகம், பொது நிதியம் ஒன்றைப் பெற்றிருக்கும்; அந்நிதியத்தில்.–

(a) கட்டணங்கள், மானியங்கள், நன்கொடைகள், கொடைகள் ஆகியவை எவையேனும் இருப்பினும் அவற்றிலிருந்து பெறப்படும் அதன் வருமானத்தை;

(b) மைய அரசு அல்லது மாநில அரசு எதனாலும் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனாலும் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணையம் அல்லது அதுபோன்ற அமைப்பு அல்லது மைய அல்லது மாநில அரசு எதற்கும் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டின்

கீழுள்ள குழுமம் அல்லது கூட்டு நிறுவனம் எதனாலும் வழங்கப்பட்ட பங்களிப்பு அல்லது மானியம் எதையும்;

(c) நிலைக்கொடைகளையும் பிற வரவுகளையும்; மற்றும்

(d) அதனால் கடனாகப் பெறப்பட்ட பணத்தையும் வரவு வைத்தல் வேண்டும்.

## அத்தியாயம்–VIII

### பணி வரைக்கட்டுகள் (நிபந்தனைகள்)

**40.** (1) இப்பல்கலைக்கழகம், இப்பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள தன் அலுவலர்கள், மற்ற நபர்கள், ஆகியோரின் நலனுக்காக, வகுத்துரைக்கப்படலாகும் முறையிலும் வரைக்கட்டுகளுக்குட்பட்டும், தான் பொருத்தமெனக் கருதலாகும் ஒய்வுதியம், பணிக்கொடை காப்பீடு, வருங்கால வைப்பு நிதியம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் வேண்டும். ஒய்வுதியம் பணிக்கொடை முதலானவை.

மையச் சட்டம் XIX/1925. (2) இப்பல்கலைக்கழகம், (1)ஆம் உட்பிரிவின்படி வருங்கால வைப்பு நிதியம் ஒன்றை அவ்வாறு ஏற்படுத்தியுள்ளவிடத்து, இப்பல்கலைக்கழகம், ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பாகவும், அந்நிதியம் ஓர் அரசு வருங்கால வைப்பு நிதியமாகவும் இருந்தாற் போன்றே, 1925–ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதியங்கள் சட்டத்தின் வகைமுறைகள் அந்நிதியத்திற்குப் பொருந்துதல் வேண்டும் என்று அரசு விளம்பலாம்.

(3) இப்பல்கலைக்கழகம், நிதிக்குழுவை கலந்தாய்வு செய்து தான் தீர்மானிக்கலாகும் முறையில் அவ்வருங்கால வைப்பு நிதியத் தொகையை முதலீடு செய்யலாம்.

**41.** இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்குட்பட்டு, இப்பல்கலைக்கழகத்தில் பணியிலமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள், மற்ற நபர்கள் ஆகியோரின் நியமனம், அவர்களை தெரிவு செயவதற்கான நடைமுறை, அவர்களின் சம்பளம் மற்றும் படித் தொகைகள் மற்றும் பிற பணிவரைக் கட்டுகள் (நிபந்தனைகள்) ஆகியவை, வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும். பணி நிபந்தனைகள்.

**விளக்கம்.**—இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ‘‘அலுவலர்கள்’’ என்னும் சொல், வேந்தரையும், இணைவேந்தரையும் உள்ளடக்குதல் ஆகாது.

**42.** (1) இப்பல்கலைக்கழகத்திலுள்ள பேராசிரியர், உதவிப் பேராசிரியர், சிறப்பு பேராசிரியர், விரிவுரையாளர், நூலகர் ஆகிய பதவிகளுக்கு நியமனஞ் செய்வதற்காக ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரைகளைச் செய்வதற்காகத் தெரிவுக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். தெரிவுக் குழு.

(2) (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான தெரிவுக் குழுவானது, துணைவேந்தரையும், வேந்தரால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரையும் அரசால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரையும் வகுத்துரைக்கப் படக்கூடிய அத்தைய பிற நபர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்:

**வரம்புரை.**—ஆனால், தெரிவுக் குழுவினால் செய்யப்படும் அத்தகைய நியமனத்திற்கான தெரிவானது அந்நியமனம் தொடர்பான பல்கலைக்கழக மானிய குழுவினால் அல்லது அரசினால் பிறப்பிக்கப்படும் வழிக்காட்டி நெறிகளுக்கு இணங்கிய வகையில் இருத்தல் வேண்டும்.

(3) துணைவேந்தர், தெரிவுக்குழுவின் கூட்டங்களில் தலைமை வகிப்பார்.

(4) தெரிவுக்குழுவின் கூட்டங்கள், துணைவேந்தரால் கூட்டப்படும்.

(5) பரிந்துரைகளைச் செய்வதில் தெரிவுக்குழுவினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை என்னவென்று, அவசர விதிகளின் மூலம் விதிக்கப்படுதல் வேண்டும்.

(6) தெரிவுக்குழு ஒன்றினால் செய்யப்படும் பரிந்துரைகளை ஆட்சிக்குழு ஏற்றுக் கொள்வதற்கு இயலாதிருக்குமானால், அது தன் காரணங்களைப் பதிவு செய்து, இறுதி ஆணைகளுக்காக அதை வேந்தருக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(7) தற்காலிப் பதவிகளுக்கான நியமனங்கள், கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ள முறையில் செய்யப்படுதல் வேண்டும்:–

(i) அத்தற்காலிக் காலியிடமானது, ஒரு கல்விக்காலத் தொடருக்கும் அதிகமானதொரு கால அளவிற்கானதாக இருக்கமானால், தெரிவுக் குழுவின் ஆலோசனையின் பேரில் நிரப்பப்படுதல் வேண்டும்:

**வரம்புரை :** ஆனால், துணை வேந்தர், பணி நலனை முன்னிட்டு அக்காலியிடத்தை நிரப்புவது தேவையாயிருக்கிறது என்று தெளிவுறக் காண்பாரானால் (ii)–ஆம் உட்கூறில் குறிப்பிடப்படும் உள்ளமை தெரிவுக்குழு (Local Selection Committee) ஒன்றினால், ஒரு தற்காலிக அடிப்படையின்பேரில் ஆறு திங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு அந்த நியமனம் செய்யப்படலாம்.

(ii) அத்தற்காலிக காலியிடமானது, ஓராண்டுக்கு குறைவானதொரு கால அளவுக்கானதாக இருக்குமானால், தொடர்புடைய புலத்தின் (Faculties) முதன்மையரையும் (Dean) துறைத் தலைவரையும், துணை வேந்தரால் பெயர் குறிக்கப்பட்ட ஒருவரையும் உள்ளடக்கிய உள்ளமை தெரிவுக்குழு ஒன்றின் பரிந்துரையின்பேரில், அத்தகைய காலி இடத்திற்கு நியமனம் செய்யப்படுதல் வேண்டும்:

**முதலாம் வரம்புரை :—**ஆனால், ஒருவரே முதன்மையர் பதவியையும் மற்றும் துறைத் தலைவர் பதவியையும் சேர்த்து வகிப்பாரானால், அத்தெரிவுக்குழு துணை வேந்தரால் பெயர் குறிக்கப்பட்ட இருவரை உள்ளடக்கியதாக இருக்கலாம்:

**இரண்டாம் வரம்புரை :—**மேலும் கற்பிக்கின்ற பதவிகளில் இறப்பினாலோ, பிற காரணம் எதனாலுமோ எதிரபாராத தற்செயல் காலியிடங்கள் ஏற்படும் நேர்வில், முதன்மையர் தொடர்புடைய துறையின் தலைவரைக் கலந்தறிந்து ஒரு திங்களுக்குத் தற்காலிகப் பணி நியமனம் ஒன்றைச் செய்து, அத்தகைய நியமனம் குறித்துத் துணை வேந்தருக்கும் பதிவாளருக்கும் அறிவிக்கலாம் ;

(iii) தற்காலிமாக நியமிக்கப்படும் ஆசிரியர் எவரும், இந்தச் சட்டத்தின்படி நியமிக்கப்படுவதற்காக தெரிவுக்குழு ஒன்றினால் அவர் பரிந்துரைக்கப்படவில்லையானால், அவர் தற்காலிக அல்லது நேர்விற்கேற்ப, நிலையான நியமனத்திற்காக ஒரு உள்ளமை தெரிவுக் குழுவினாலோ அல்லது ஒரு தெரிவுக் குழுவினாலோ பின்னர் தெரிந்தெடுக்கப்பட்டாலன்றி, அத்ததைய தற்காலிக வேலை வாய்ப்பின்பேரில் பணியில் தொடர்ந்து இருத்தல் ஆகாது.

துறைத் தலைவர்களின் பணி வரையறைகளும் வரைக்கட்டுகளும்.

**43.** (1) இப்பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் ஒரு பேராசிரியராக அல்லது இயக்குநராக இருக்க வேண்டிய ஒரு தலைவரைக் கொண்டிருக்கும்; மற்றும் அவருடைய கடமைகளும் செயற்பணிகளும் நியமனத்திற்கான வரையறைகளும் வரைக்கட்டுக்கும் அவசர விதிகளால் வகுத்துரைக்கப்பட வேண்டும்;

**முதலாம் வரம்புரை :—** ஆனால், துறை எதிலேனும் ஒருவருக்கு மேற்பட்ட பேராசிரியர்கள் இருப்பார்களானால், அந்தத் துறையின் தலைவர், அவசர விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் நியமிக்கப்படுதல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை :—**மேலும், பேராசிரியர் எவரும் இல்லாத துறையொன்றில். துணைப் பேராசிரியர் ஒருவர் அல்லது சிறப்பு பேராசிரியர் ஒருவர் அவசர விதகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் துறையின் தலைவராக நியமிக்கப்படலாம்.

(2) துறைத் தலைவராக நியமிக்கப்பட முன்வந்ததை ஏற்க மறுத்துவிடுவதற்கு ஒரு பேராசிரியருக்கு அல்லது உதவிப் பேராசிரியருக்கு அல்லது சிறப்புப் பேராசிரியருக்கு உரிமையுண்டு.

(3) துறைத் தலைவராக நியமிக்கப்பட்ட ஒருவர், மூன்றாண்டுக் கால அளவிற்கு அத்தகையவராகப் பதவி வகித்தல் வேண்டும். மற்றும் மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியிடையவராவார்.

(4) துறைத்தலைவர் ஒருவர், தம்முடை பதவிக்கால அளவின்போது, எந்த நேரத்திலும் தம்முடைய பதவியை விட்டு விலகலாம்.

(5) துறைத்தலைவர் ஒருவர், அவசர விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய செயற்பணிகளைப் புரிந்து வருவார்.

புலங்களின் முதன்மையர்கள்.

**44.** (1) புலங்களின் முதன்மையர் ஒவ்வொருவரும், அப்புலத்திலுள்ள பேராசிரியர்களுக்கிடையேயிருந்து துணை வேந்தரால் மூன்றாண்டுக் கால அளவுக்கு நியமிக்கப்படுவார் மற்றும் அவர் மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடைவராவார்:

**வரம்புரை:** ஆனால், எந்தச் சமயத்திலேனும் புலம் ஒன்றில் பேராசிரியர் எவரும் இல்லாதிருந்தால், துணைவேந்தர் அப்புல முதன்மையருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தி வருவார்.

(2) முதன்மையரின் பதவி காலியாக இருக்கின்ற போது அல்லது அம்முதன்மையரானவர் நோய், பணிக்கு வராமை காரணமாகவோ அல்லது பிற காரணம் எதனாலேனும் தம்முடைய பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கின்றபோது, அவருடைய பதவியின் கடமைகள் அந்நோக்கத்திற்காகத் துணைவேந்தரால் நியமிக்கப்படக் கூடியவரால் புரிந்து வரப்படும்.

(3) முதன்மையரானவர், அப்புலத்தின் தலைவராயிருப்பார் மற்றும் அப்புலத்தில் கற்பிக்கப்படுவதற்கும் ஆராய்ச்சி செய்யப்படுவதற்கும் அவற்றின் தரங்களைப் பேணி வருவதற்கும் பொறுப்புடையவராய் இருப்பார். முதன்மையர் அவசர விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக் கூடிய பிற செயற்பணிகளையும் பெற்றிருப்பார்.

(4) முதன்மையர், பாடக்குழுக்களின் அல்லது, நேர்விற்கேற்ப, புலக் குழுக்களின் கூட்டம் எதற்கும் வருகை தருவதற்கும், அதில் பேசுவதற்கும் உரிமை பெற்றிருப்பார் ஆனால், அதன் உறுப்பினராக அவர் இருந்தாலன்றி, அதில் வாக்களிப்பதற்கு அவர் உரிமை பெற்றிருக்கமாட்டார்.

## அத்தியாயம்–IX

### பல்வகைப்பட்டவை

**45.** இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் பதவி வழி உறுப்பினர்களல்லாத பிற உறுப்பினர்களுக்கிடையேயும் எழும் தற்செயல் காலியிடங்கள் அனைத்தும், எந்த உறுப்பினருடைய பதவியிடம் காலியாக ஆகியுள்ளதோ அந்த உறுப்பினரைப் பெயர் குறித்து நியமனம் செய்தவரால் அல்லது அமைப்பினால் வசதிக்கேற்றபடி எவ்வளவு விரைவில் கூடுமோ அவ்வளவு விரைவில் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் தற்செயல் காலியிடமொன்றுக்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் எவருடைய பதவியிடத்தை அவர் நிரப்புகிறாரோ அவர் ஓர் உறுப்பினராய் இருந்திருக்கக்கூடிய கால அளவின் எஞ்சிய பகுதிக்கு அத்தகைய அதிகார அமைப்பு அல்லது அமைப்பின் உறுப்பினராக இருந்து வருவார்: தற்செயல் காலியிடங்களை நிரப்புதல்

**வரம்புரை:** தற்செயல் காலியிடம் எதுவும் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினரின் பதவிக்காலமும் முடிவடையும் தேதிக்குமுன், ஆறு மாதங்களுக்குள்ளாக அத்தகைய காலியிடம் ஏற்படுமானால், நிரப்பப்படுதலாகாது.

**46.** இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் காலியிடம் ஏதேனும் இருக்கின்ற காரணத்தால் மட்டுமே அல்லது இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவரின் பெயர் குறித்து நியமித்ததில் அல்லது நியமனத்தில் குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் உள்ள காரணத்தால் மட்டுமே அல்லது, நேர்விற்கேற்ப தகுதிகளை ஊறுபடுத்தாத (பாதிக்காத) அத்தகைய செயல் அல்லது நடவடிக்கையில் குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் உள்ள காரணத்தால் மட்டுமே, அல்லது பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு இந்தச் சட்டத்தின்படி கோரப்பட்டவாறான அத்தகைய கால இடைவெளிகளில் கூடவில்லை என்னும் காரணத்தால் மட்டுமே செல்லாததாக ஆக்கப்படுதலாகாது. பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்புகளின் மற்றும் அமைப்புகளின் நடவடிக்கைகள் காலியிடங்கள் காரணமாகச் செல்லாதவையாக ஆக்கப்படுதல் ஆகா.

**47.** (1) இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் எவரேனும் ஆட்சிக் குழுவின் கருத்தின்படி, ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கியதாகவுள்ள ஒரு குற்றச்செயலுக்காக குற்றவியல் வழக்கு நீதிமன்றமொன்றினால் தண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பாரானால் அல்லது கடுந்தவறான நடத்தை (Gross Misconduct) இழைத்த குற்றவாளியாக இருப்பாரானால், ஆட்சிக் குழுவின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையராலும் கூட்டத்திற்கு வருகை தந்து வாக்களிக்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாத பெரும்பான்மையராலும் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலமாகவும் இதன் பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணை ஒன்றின் மூலமாகவும் அத்தகைய நபரை, இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் ஆட்சிக் குழுவானது நீக்கம் செய்யலாம் மற்றும் அதே காரணத்திற்காக, இப்பல்கலைக்கழகத்தால் அந்த நபருக்கு அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட பட்டம் அல்லது பட்டயம் எதனையும் திரும்பப் பெறலாம். பல்கலைக்கழக உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல்

(2) நபர் எவரும், மனச் சீர்கேடுற்றவராகவோ அல்லது ஒரு செவிட்டு ஊமையாகவோ ஆகியிருக்கின்றவரென்றால், அல்லது நொடித்த ஒருவராக நீதித் தீர்ப்பு பெருவதற்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தால் அல்லது நொடித்த ஒருவராக நீதித் தீர்ப்பு அளிக்கப் பெற்றிருந்தால், இதன் பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணையொன்றின் மூலம் ஆட்சிக் குழுவானது, இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் அவரை நீக்கம் செய்யலாம்.

(3) நபரொருவரின் மீதும் எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கு எதிராகக் காரணங்காட்டுவதற்கு, அவருக்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி இந்தப் பிரிவின்படி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

(4) (1) ஆம் உட்பிரிவின்படி அல்லது, நேர்விற்கேற்ப, (2) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றின்படியொன்றினை (நகல்), அது அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய நபருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

**48.** இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது இப்பல்கலைக்கழக பிற அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவராக எவரேனும் உரியவாறு பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்டுள்ளாரா அல்லது உறுப்பினராயிருப்பதற்குத் தகுதியுடையவராயிருக்கின்றாரா என்பது குறித்து வினா ஏதேனும் எழுமானால், அவ்வினா, வேந்தருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். அதன் மீதான அவருடைய முடிவே அறுதியானதாகும். பல்கலைக்கழக அதிகார அமைப்புகளையும்/ அமைப்புகளையும், அமைத்துரு வாக்குதல் பற்றிய பூசல்கள்.

குழுக்களை அமைத்துரு வாக்குதல்.

**49.** இப்பல்கலைக்கழக அதிகார அமைப்புகள் அனைத்தும், குழுக்களை அமைத்துருவாக்குவதற்கும் அல்லது மாற்றியமைப்பதற்கும் மற்றும் தங்களுடைய அதிகாரங்களுக்குள் தங்கள் பொருத்தம் என்று கருதுகிறவற்றை அவற்றிடம் ஒப்படைவு செய்தற்கும் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய குழுக்கள், மற்றப்படி வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, தொடர்புடைய அதிகார அமைப்பின் உறுப்பினர்களையும் அவ்வதிகார அமைப்பு ஒவ்வொரு நேர்விலும் பொருத்தமெனக் கருதக்கூடிய பிற நபர்கள் எவரேனும் இருப்பின், அவர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்;

தகவல் பெறுவதற்கான அதிகாரம்.

**50.** இந்தச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசு எழுத்துருவிலான ஆணையின் மூலமாக, இப்பல்கலைக்கழக அலுவல்கள் தொடர்பான பொருட்பாடு எதையும் பற்றி, இப்பல்கலைக்கழகத்திடமிருந்து தகவல் எதையும் கேட்டுப் பெறலாம் மற்றும் இப்பல்கலைக்கழகம் அத்தகைய தகவல் தன்னிடம் இருக்குமானால், அத்தகைய தகவலை நியாயமானதொரு கால அளவுக்குள் அரசுக்கு அளித்தல் வேண்டும்:

**வரம்புரை :** ஆனால், இப்பல்கலைக்கழகம் கமுக்கமானதெனக் கருதுகிற தகவலைப் பொறுத்தவரையில் இப்பல்கலைக்கழகமானது அதை வேந்தர் மற்றும் இணைவேந்தர் ஆகியோர் முன்பு வைக்கலாம்.

முதல் துணை வேந்தரின் நியமனம்.

**51.** 10–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரில் என்ன அடங்கியிருந்த போதிலும், அறிவிக்கை செய்யப்பட்ட தேதியில் இருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் துணை வேந்தரானவர், அரசினால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கு அதனால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தின் பேரிலும் அது பொருத்தமெனக் கருதலாகும் பிற வரைக்கட்டுகளின் பேரிலும் நியமிக்கப்படுவார்:

**வரம்புரை :** ஆனால், முதல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டவர் அவருடைய பதவிக் காலத்தின்போது அறுபத்தைந்து வயதை நிறைவெய்துவாரானால், பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

முதல் பதிவாளரின் நியமனம்.

**52.** 12–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும் அறிவிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் பதிவாளரானவர், அரசினால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கு அதனால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தின் பேரிலும் மற்றும் அது பொருத்தமெனக் கருதலாகும் பிற வரைக் கட்டுகளின்பேரிலும் நியமிக்கப்படுவார்:

**வரம்புரை :** ஆனால், முதல் பதிவாளராக நியமிக்கப்பட்டவர், அவருடைய பதவி காலத்தின்போதும் கல்வியாளராக இருந்தால் அறுபது வயதை நிறைவெய்தும்போதும், கல்வியாளரல்லாதவராக இருந்தால் ஐம்பத்தெட்டு வயதை அவர் நிறைவெய்தும்போதும் பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

முதல் துணை வேந்தரின் மாறுதற்கால அதிகாரங்கள்.

**53.** (1) அறிவிக்கை செய்யப்பட்ட தேதிக்கு பின்பு ஆறு திங்களுக்குள் அல்லது அறிவிக்கையின் மூலம் அரசு பணிக்கக் கூடிய ஓராண்டுக்கு மேற்படாத மேலுமான கால அளவிற்குள் ஆட்சிக்குழு, கல்வி அலுவல் நிலைக்குழு ஆகியவற்றையும் இப்பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புக்களையும் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது முதல் துணை வேந்தரின் கடமையாகும்.

(2) முதல் துணை வேந்தர் அரசைக் கலந்தறிந்து, இப்பல்கலைக்கழகம் செயற்படுவதற்கு தேவையாயிருக்கக்கூடிய விதிகளைச் செய்தல் வேண்டும்.

(3) (1)–ஆம் உட்பிரிவின்படி அமைத்து உருவாக்கப்பட்ட அதிகார அமைப்புக்கள், அரசு இதன்பொருட்டு அறிவிக்கையின் மூலம் குறித்துரைக்கக் கூடிய தேதியில் அவற்றின் செயற்பணிகளைச் செலுத்தத் தொடங்கும்.

(4) தேவைப்படலாகும் நிலை விதிகள், அவசர விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றை வரைந்து, அவற்றை முடிவு செய்வதற்காக, அவை பற்றி நடவடிக்கை எடுக்கத் தகுதிவாய்ந்த அந்தந்த அதிகார அமைப்புகளுக்கு அவற்றைப் பணிந்தனுப்ப வேண்டியது முதல் துணை வேந்தரின் கடமையாகும். அத்தகைய நிலைவிதிகள், அவசர விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை, வனையப்பட்டவுடன் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்.

(5) இந்தச் சட்டத்திலும் நிலை விதிகளிலும், என்ன அடங்கியிருந்தபோதிலும், மற்றும் அதிகார அமைப்பு ஒன்று உரியவாறு அமைக்கப்படும் காலம் வரையிலும் முதல் துணை வேந்தர் இந்தச் சட்டம் மற்றும் நிலைவிதிகளின்படி அத்தகைய அதிகார அமைப்பின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளில் எதனையும் செலுத்தி வருவதற்கும் புரிந்து வருவதற்கும் தற்காலிகமாக அலுவலர் எவரையும் நியமிக்கலாம் அல்லது குழு எதையும் அமைத்துருவாக்கலாம்.

**54.** இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்கள், அதன்படி செய்யப்பட்ட நிலைவிதிகள், அவசர விதிகள், ஒழுங்குமுறை விதிகள், ஆணைகள் ஆகியவற்றில் என்ன அடங்கியிருந்த போதிலும், அறிவிக்கை செய்யப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், பல்கலைக்கழக பரப்பிடத்தில் உள்ள ஆசிரியர் கல்விக்கான படிப்புப் பிரிவுகளை போதிக்கின்ற கல்லூரிகள் அத்தகைய நாளுக்கு அடுத்து முன்னதாக உள்ள தேதியன்று அவை இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட சட்டம் எதனின்படியும் அமைத்துருவாக்கப்பட்ட எந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தனவோ அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிக்கப்படுதல் வேண்டும் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஒரு சில கல்லூரிகளை பல்கலைக் கழகத்திற்கு மாற்றுதல்.

**55.** (1) (2) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு (இதன்பின்பு இந்தப் பிரிவில் பல்கலைக்கழக சட்டங்கள் எனப்படுவதான) இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட பல்கலைக்கழக சட்டங்கள், அறிவிக்கை செய்யப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், ஆசிரியர் கல்வியில் குறித்த கால படிப்புப் பிரிவுகளை போதிக்கின்ற கல்லூரிகளைப் பொறுத்த அளவில் பொருந்துவது அற்றுப் போதல் வேண்டும். ஒருசில தமிழ்நாடு சட்டங்கள் பொருந்தா எனல்

(2) அவ்வாறு அற்றுப்போதலானது—

(a) (1)—ஆம் உட்பிரிவில் கட்டப்பட்ட கல்லூரிகளைப் பொறுத்து, மேற்சொன்ன பல்கலைக்கழக சட்டங்களின் முந்தைய செயற்பாடு;

(b) மேற்சொன்ன பல்கலைக்கழகச் சட்டங்களுக்கு எதிராக புரியப்பட்ட குற்றச் செயல் எதனையும் பொறுத்த அளவில், ஏற்க நேரிட்ட தண்டம், தண்ட இழப்பு, அல்லது தண்டனை எதனையுமோ; அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வழி (பரிகாரம்) எதையும் பாதித்தல் ஆகாது. மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதது போன்றே, அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கைகள் அல்லது தீர்வழி (பரிகாரம்) எதுவும் தொடுக்கப்படலாம், தொடர்ந்து நடத்தப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம் மற்றும் அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1)ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், மேற்சொன்ன பல்கலைக்கழக சட்டங்களின்படி செய்யப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்ட தேதியில் நடைமுறையில் உள்ள நிலை விதிகள், அவசர விதிகள் ஒழுங்குமுறை விதிகள் ஆகிய அனைத்தும் அவற்றிற்கு பதிலாக இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்படக்கூடிய நிலை விதிகள், அவசர விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை அமைகின்ற வரையில் அவை எந்த அளவிற்கு இந்தச் சட்டத்தின் வகை முறைகளுடன் ஒவ்வாதனவாக இல்லாதிருக்கின்றனவோ அந்த அளவிற்கு தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரும்.

(4) இந்தச் சட்டத்தில் மற்றும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட நிலைவிதிகள், அவசர விதிகள் மற்றும் (3)ஆம் உட்பிரிவின்படி நடைமுறையில் தொடர்ந்து இருக்கிற ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றில் என்ன அடங்கியிருந்த போதிலும், அறிவிக்கை செய்யப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னர், இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்கள் எதன்படியேனும் அமைக்கப்பட்ட (இதன் பின்பு, இந்தப் பிரிவில் ‘‘அந்தப் பல்கலைக்கழகம்’’ என குறிப்பிடப்படுவதான) பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்பட்ட (1)ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட கல்லூரி ஒன்றின் மாணவர் ஒருவராக இருந்த நபர் ஒவ்வொருவரும், அல்லது அந்தப் பல்கலைக்கழகத்தின் தேர்வுகள் எவற்றையும் எழுதத் தகுதி உள்ளவராக இருந்த நபர் ஒவ்வொருவரும், அந்தப் பல்கலைக்கழகத்தின் குறித்த கால படிப்புப் பிரிவை நிறைவு செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகமானது அந்தப் பல்கலைக்கழகத்தின் குறித்த கால படிப்புப் பிரிவிற்கு இணங்கிய வகையில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கால அளவிற்கும் அத்தகைய முறையிலும் அத்தகைய மாணவர்களுக்கு கற்பித்தல் பயிற்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய மாணவர்கள், அத்தகைய கால அளவின்போது அந்தப் பல்கலைக்கழகத்தால் வைக்கப்படும் அல்லது நடத்தப்படும் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய தேர்வுகளின் முடிவுகளின் பேரில் தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு அப்பல்கலைகழகத்தால் நேரிணையான பட்டம் அல்லது பிற கல்விச் சிறப்புகளை அளித்தல் வேண்டும்.

(5) (2)ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, ஆனால் (3) முதல் (4) வரையிலான உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு ஊறில்லாமல், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகின்ற, கல்லூரி எதனையும் பொறுத்தளவில் பல்கலைக்கழக சட்டங்களின் வகைமுறைகள் எதனின்படியும் அறிவிக்கை செய்யப்பட்ட தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தின் நேர் இணையான வகைமுறையின்படி

செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் நேர் இணையான வகைமுறையின்படி செய்யப்பட்ட செயல் எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் தள்ளிவைக்கப்பட்டாலன்றியும் மற்றும் தள்ளி வைக்கப்படுகின்ற வரையிலும் அதன்படி தொடர்ந்து செயல் விளைவு பெற்றிருத்தலும் வேண்டும்.

நூலகர்.

**56.** (1) நூலகர், இந்நோக்கத்திற்காக அமைக்கப்படும் நூலகம் தெரிவுக் குழுவின் பரிந்துரையின் பேரில், வகுத்துரைக்கப்படக்கூடிய கால அளவுக்கும் அத்தகைய வரையறைகள், மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும் நூலகர் ஆட்சிக் குழுவால் நியமிக்கப்பட்ட, இப்பல்கலைக்கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராக இருந்து வருவார்.

(2) நூலகர், ஆட்சிக் குழுவால், அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தியும் கடமைகளைப் புரிந்தும் வருவார்.

சிறப்பு நியமன முறை.

**57.** (1) ஆட்சிக் குழு, தான் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், இப்பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் பதவி ஒன்றை ஏற்றுக் கொள்ளுமாறு, உயர்கல்வி சிறப்பையும் தொழில்முறைத் தேர்ச்சிப் பேறுகளையும் (Professional attainments) பெற்றுள்ள ஒருவரை அழைக்கலாம்; மற்றும் அவர் ஏற்றுக் கொண்டதன் பேரில், அவரை அப்பதவிக்கு நியமிக்கலாம்.

(2) ஆட்சிக்குழு, அவசர விதிகளில் விதிக்கப்பட்டுள்ள முறைக்கிணங்க கூட்டுச் செயல் திட்டமொன்றை மேற்கொள்வதற்காக, பிற பல்கலைக் கழகம் அல்லது அமைப்பு எதிலேனும் பணிபுரிகின்ற ஆசிரியர் ஒருவரையோ அல்லது பிறகல்விப் பணியாளர் தொகுதியின் பிற உறுப்பினர் எவரையுமோ நியமிக்கலாம்.

இணைக்கப்பட்ட கல்லூரிகளின் மீதான அறிக்கை.

**58.** ஆட்சிக்குழுவானது, அறிவிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒவ்வொரு மூன்றாண்டுகளின் முடிவிலும், இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளின் நிலையைப் பற்றி அரசிற்கு அறிக்கையொன்றை பணிந்தனுப்புதல் வேண்டும். அரசு, அவ்வறிக்கையின் மீது தான் பொருத்தமெனக் கருதும் நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**59.** (1) அறிவிக்கை தேதிக்குப் பின்பு இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதையேனும் முதல் முதலில் அமைத்துருவாக்குதல் குறித்தோ அல்லது மீண்டும் அமைத்துருவாக்குதல் குறித்தோ, அல்லது பிறவாறு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துதல் குறித்தோ இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, அறிவிக்கையின் மூலமாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காக தேவையானதென்று அல்லது உகந்ததென்று தனக்குத்தோன்றக்கூடிய, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாததவையாயிராத அத்தகைய வகை முறைகளைச் செய்யலாம்;

**வரம்புரை :** ஆனால், அத்தகைய அறிவிக்கை எதுவும், 3–ஆம் பிரிவின்படி பல்கலைக் கழகம் நிறுவியமைக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவடைந்ததற்கு பின்பு, பிறப்பிக்கப்படுதலாகாது.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படியோ இந்தச் சட்டத்தின் பிறவகை முறைகள் எவற்றின்படியுமோ பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, நடைமுறைக்கு இயன்ற விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது, அவ்வாறு வைக்கப்படும் கூட்டத் தொடர் அல்லது அடுத்த கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய அறிவிக்கை எதிலும் மாறுதல் எதையேனும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமானால், அல்லது அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படலாகாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அந்த அறிவிக்கையானது அதன்பின்பு அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்லாற்றல் பெறுதல் வேண்டும்; அல்லது நேர்விற்கேற்ப, செல்லாற்றல் பெறாதுபோதல் வேண்டும்; எனினும், அத்தகைய மாறுதல் அல்லது நீக்கம் எதுவும் அந்த அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

## இணைப்புப் பட்டியல்

இணைப்புப் பட்டியல் (54 ஆம் பிரிவையும் 55–ஆம் பிரிவையும் காணவும்)

1. சென்னைப் பல்கலைக்கழகச் சட்டம், 1923 (தமிழ்நாடு சட்டம் VII/1923)
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டம், 1965 (தமிழ்நாடு சட்டம் 33/1965)
3. பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம், 1981 (தமிழ்நாடு சட்டம் 1/1982)
4. பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம், 1981 (தமிழ்நாடு சட்டம் 2/1982)
5. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம், 1984 (தமிழ்நாடு சட்டம் 15/1984)
6. அழகப்பா பல்கலைக்கழகச் சட்டம், 1985 (தமிழ்நாடு சட்டம் 23/1985)

7. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டம், 1990 (தமிழ்நாடு சட்டம் 31/1990)

8. பெரியார் பல்கலைக்கழகச் சட்டம், 1997 (தமிழ்நாடு சட்டம் 45/1997)

9. திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டம், 2002 (தமிழ்நாடு சட்டம் 32/2002)

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

**2008–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது.**

## தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2008

***தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.***

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:–

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கின்றார் :–

### பகுதி–I

### முன்னுரை

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1 (1) இந்த அவசரச் சட்டம், 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இஃது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பகுதி–II

### 1919ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்

தமிழ்நாடு சட்டம் IV/1919

78–ஆம் பிரிவிற்கும், 79–ஆம் பிரிவிற்கும் பதிலாக அமைத்தல்.

2. (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1919–ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1919–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 78–ஆம் பிரிவிற்கும், 79–ஆம் பிரிவிற்கும் பதிலாக, பின்வரும் பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"78. **மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள்:**—மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு வெவ்வேறு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:–

(a) மதிப்பீட்டின் தொகையானது பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாதபோது, தொடர்பான சிற்றொகுதிக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(b) மதிப்பீட்டின் தொகையானது பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத போது, ஆணையரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(c) மதிப்பீட்டின் தொகையானது ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்படாதபோது, மேயரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(d) மதிப்பீட்டின் தொகையானது அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, (வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக்குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் ஒப்புதல் கோரப்படுதல் வேண்டும்.

(e) மதிப்பீட்டின் தொகையானது எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத போது, வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(f) மதிப்பீட்டின் தொகையானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் பத்து கோடி ரூபாய்க்கு மேற்படாதபோது, மன்றத்தின் ஒப்புதலானது கோரப்படுதல் வேண்டும்.

(g) மதிப்பீட்டின் தொகையானது பத்து கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது, மாநில அரசின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

**79. அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, செலவாகிற பணிகள்.**— (*1*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது, அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிற நிலையிலான பணி எதையுமோ அல்லது தொடர் பணி எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளவிடத்து,—

(*a*) ஆணையர், தேவைப்படக்கூடிய அத்தகைய மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் உள்ளடங்கலான விரிவான அறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும் மற்றும் அதனை,—

(*i*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால் (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்.

(*ii*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஒரு கோடி ருபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்.

(*iii*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஒரு கோடி ருபாய்க்கு மேற்படுமானால் மன்றத்தின் முன்பு வைத்தல் வேண்டும்.

(*b*) தொடர்பான நிலைக் குழுவோ அல்லது வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவோ அல்லது நேர்விற்கேற்ப மன்றமோ அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்தல் வேண்டும்; மற்றும் அதனை மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதனைத் தள்ளி விடலாம்.

(2) (*a*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது பத்து கோடி ரூபாய்க்கு மேற்படுகிற திட்டத்திற்கு, மாறுதல்களுக்கு உட்பட்டோ அல்லது பிறவாறோ மன்றம் ஏற்பளிக்கிறவிடத்து அதனை மாநில அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(*b*) மாநில அரசானது, இத்திட்டத்திற்கு மொத்தமாகவோ, அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதனைத் தள்ளி விடலாம்; மற்றும் மாநில அரசின் அத்தகைய ஒப்பளிப்பு இல்லாமல் பணியானது தொடங்கப்படுதல் கூடாது.

(*c*) மேற்சொன்னவாறு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டத்தில், மாநில அரசின் ஒப்பளிப்பு இல்லாமல் முக்கியமான மாற்றம் எதையும் செயல் விளைவுக்குக் கொண்டு வருதல் கூடாது.''.

80–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. 1919ஆம் ஆண்டு சட்டத்தின் 80–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

''(2) மாநகராட்சியின் சார்பாக செய்யப்படும் ஒப்பந்தம் ஒவ்வொன்றும் பின்வரும் வகைமுறைகளுக்கு உட்பட்டு ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும், அதாவது :—

(a) தொடர்பான சிற்றொகுதிகள் குழுவினால் ஒப்பந்தமானது ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இருந்தாலன்றி, பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டு செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(b) பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும்.

(c) ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மேயரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(d) அறுபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவினால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு இருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(e) எழுபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால், ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(f) ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் பத்து கோடி ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மன்றத்தினால் அதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(g) பத்து கோடி ரூபாய்க்கு மேற்பட்டு, மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், அதற்கு மாநில அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(h) நாற்பதாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு, மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஆணையரால் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாள்களுக்குள்ளாக தொடர்பான நிலைக் குழுவிற்கு அறிக்கை செய்யப்படுல் வேண்டும்.''.

**பகுதி–III**

**1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

**4.** (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1971–ஆம் ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான) **1971–**ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் **97–**ஆம் பிரிவிற்கும் **98–**ஆம் பிரிவிற்கும் பதிலாக, பின்வரும் பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

97–ஆம் பிரிவிற்கும், 98–ஆம் பிரிவிற்கும் பதிலாக அமைத்தல்.

"**97. மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள்.**—மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு வெவ்வேறு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :–

(a) மதிப்பீட்டின் தொகையானது ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாதபோது, தொடர்பான சிற்றொகுதிக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(b) மதிப்பீட்டின் தொகையானது ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாதபோது, ஆணையரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(c) மதிப்பீட்டின் தொகையானது பத்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்படாதபோது, மேயரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(d) மதிப்பீட்டின் தொகையானது இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் முப்பது இலட்ச ரூபாய்கு மேற்படாதபோது, (வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக்குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் ஒப்புதல் கோரப்படுதல் வேண்டும்.

(e) மதிப்பீட்டின் தொகையானது முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாத போது, வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(f) மதிப்பீட்டின் தொகையானது ஐம்பது இலட்ச ரூபாய்கு மேற்பட்டு, ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாதபோது, மன்றத்தின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(g) மதிப்பீட்டின் தொகையானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது அரசின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

98. **இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு செலவாகிற பணிகள் :**— (1) மொத்த மதிப்பீட்டுச் செலவானது இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்படுகிற நிலையிலான பணி எதையுமோ அல்லது தொடர் பணி எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ள விடத்து,–

(*a*) ஆணையர், தேவைப்படக்கூடிய அத்தகைய மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் உள்ளடங்கலான விரிவான அறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்கு அதனை ஆவன செய்தல் வேண்டும் மற்றும் அதனை,—

(*i*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்.

(*ii*) மொத்த மதிப்பீடுச் செலவானது முப்பது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்.

(*iii*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஐம்பது இலட்ச ரூபாய்க்கு மேற்படுமானால் மன்றத்தின் முன்பு வைத்தல் வேண்டும்.

(*b*) தொடர்பான நிலைக் குழுவோ அல்லது வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவோ அல்லது நேர்விற்கேற்ப மன்றமோ அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்தல் வேண்டும்; மற்றும் அதனை மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதனைத் தள்ளி விடலாம்.

(2) (*a*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஒரு கோடி ருபாய்க்கு மேற்படுகிற திட்டத்திற்கு மாறுதல்களுக்கு உட்பட்டோ அல்லது பிறவாறோ மன்றம் ஏற்பளிக்கிறவிடத்து அதனை அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(*b*) அரசானது, இத்திட்டத்திற்கு மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதனை தள்ளி விடலாம்; மற்றும் அரசின் அத்தகைய ஒப்பளிப்பு இல்லாமல் பணியானது தொடங்கப்படுதல் கூடாது.

(*c*) மேற்சொன்னவாறு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட அளிக்கப்பட்ட திட்டத்தில், அரசின் ஒப்பளிப்பு இல்லாமல் முக்கியமான மாற்றம் எதையும் செயல் விளைவுக்குக் கொண்டு வருதல் கூடாது.''.

99–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5. 1971–ஆம்** ஆண்டு சட்டத்தின் **99–ஆம்** பிரிவில், **(2)–ஆம்** உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

(2) மாநகராட்சியின் சார்பாக செய்யப்படும் ஒப்பந்தம் ஒவ்வொன்றும் பின்வரும் வகைமுறைகளுக்கு உட்பட்டு ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும், அதாவது:–

(a) தொடர்பான சிற்றொகுதிகள் குழுவினால் ஒப்பந்தமானது ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இருந்தாலன்றி, ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டு செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(b) ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும்.

(c) பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினை கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மேயரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(d) இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் முப்பது இலட்சம் ரூபாய் மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் நிலைக்குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(e) முப்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(f) ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மன்றத்தினால் அதற்கு ஒப்பளிப்பு வழங்கபட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(g) ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு, மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், அதற்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(h) பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு, மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற, ஆணையரால் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாள்களுக்குள்ளாக தொடர்பான நிலைக் குழுவிற்கு அறிக்கை செய்யப்படுதல் வேண்டும்.''.

## பகுதி–IV

### 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்

99–ஆம் பிரிவிற்கும், 100–ஆம் பிரிவிற்கும் பதிலாக அமைத்தல்.

**6. (**இதன் பின்பு இந்தப் பகுதியில் **1981–ஆம்** ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான) **1981–ஆம்** ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் **99–ஆம்** பிரிவிற்கும் **100–ஆம்** பிரிவிற்கும் பதிலாக, பின்ரும் பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :— தமிழ்நாடு சட்டம் 25/1981.

''99. **மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு நகராட்சிய அமைப்புகளின் அதிகாரங்கள் :**— மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு வெவ்வேறு நகராட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:–

(a) மதிப்பீட்டின் தொகையானது ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பாடாதபோது, தொடர்பான சிற்றொகுதிக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(b) மதிப்பீட்டின் தொகையானது ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத போது, ஆணையரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(c) மதிப்பீட்டின் தொகையானது பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாதபோது, மேயரின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(d) மதிப்பீட்டின் தொகையானது இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் முப்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாதபோது, (வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக்குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் ஒப்புதல் கோரப்படுதல் வேண்டும்.

(e) மதிப்பீட்டின் தொகையானது முப்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத போது, வரிவிதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(f) மதிப்பீட்டின் தொகையானது ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாதபோது, மன்றத்தின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

(g) மதிப்பீட்டின் தொகையானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிறபோது, அரசின் ஒப்பளிப்பானது கோரப்படுதல் வேண்டும்.

**100. இருபது இலட்ச ரூபாய்க்கு மேற்பட்டு, செலவாகிற பணிகள்** :—(*i*) மொத்த மதிப்பீட்டுச் செலவானது இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்படுகிற நிலையிலான பணி எதையுமோ அல்லது தொடர் பணி எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளமிடத்து.—

(a) ஆணையர், தேவைப்படக்கூடிய அத்தகைய மதிப்பீடுகள் மற்றும் வரைப்படங்கள் உள்ளடங்களான விரிவான அறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும் மற்றும் அதனை,—

(i) மொத்த மதிப்பீட்டுச் செலவானது இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் முப்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழு அல்லாத பிற) தொடர்பான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்.

(ii) மொத்த மதிப்பீட்டுச் செலவானது முப்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் இருக்குமானால், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்.

(iii) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படுமானால் மன்றத்தின் முன்பு வைத்தல் வேண்டும்.

(b) தொடர்பான நிலைக் குழுவோ அல்லது வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவோ அல்லது நேர்விற்கேற்ப மன்றமோ அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்தல் வேண்டும்; மற்றும் அதனை மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதனைத் தள்ளி விடலாம்.

(2) (a) மொத்த மதிப்பீட்டுச் செலவானது ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படுகிற திட்டத்திற்கு மாறுதல்களுக்கு உட்பட்டோ அல்லது பிறவாறோ மன்றம் ஏற்பளிக்கிறவிடத்து அதனை அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(b) அரசானது, இத்திட்டத்திற்கு மொத்தமாகவோ அல்லது மாறுதல்களுக்கு உட்பட்டோ ஏற்பளிக்கலாம் அல்லது அதனைத் தள்ளி விடலாம்; மற்றும் அரசின் அத்தகைய ஒப்பளிப்பு இல்லாமல் பணியானது தொடங்கப்படுதல் கூடாது.

(c) மேற்சொன்னவாறு ஒப்புளிப்பு வழங்கப்பட்ட திட்டத்தில், அரசின் ஒப்பளிப்பு இல்லாமல் முக்கியமான மாற்றம் எதையும் செயல் விலைவுக்குக் கொண்டு வருதல் கூடாது.”.

7. 1981—ஆம் ஆண்டு சட்டத்தின் 101—ஆம் பிரிவில், (2)—ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் உட்பிரிவினாது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 101—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

”(2) மாநகராட்சியின் சார்பாக செய்யப்படும் ஒப்பந்தம் ஒவ்வொன்றும் பின்வரும் வகைமுறைகளுக்கு உட்பட்டு ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும், அதாவது:—

(a) தொடர்பான சிற்றொகுதிகள் குழுவினால் ஒப்பந்தமானது ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இருந்தாலன்றி ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(b) ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும் ஆணையரால் செய்யப்படுதல் வேண்டும்.

(c) பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினை கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மேயரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு இருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(d) இருபது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் முப்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், (வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக்குழு அல்லாத பிற தொடர்பான நிலைக் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(e) முப்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், வரி விதிப்பு மற்றும் நிதி மீதான நிலைக் குழுவினால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(f) ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், மன்றத்தினால் அதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(g) ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு, மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஒப்பந்தம் எதுவும், அதற்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி ஆணையரால் செய்யப்படுதல் கூடாது.

(h) பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்பட்டு, மதிப்பீட்டுச் செலவினைக் கொண்டிருக்கிற ஆணையரால் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாள்களுக்குள்ளாக தொடர்பான நிலைக்குழுவிற்கு அறிக்கை செய்யப்படுதல் வேண்டும்.''.

2008 ஆம் ஆண்டு ஆகஸ்டு
திங்கள் 24 ஆம் நாள்.

**சுர்ஜித் சிங் பர்னாலா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**நோக்க—காரண விளக்கவுரை**

அரசானது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகமான அதிகாரங்களையும் பணிகளையும் வழங்குவது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்குமாறு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சரின் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்துருவாக்கியது.

2. ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களில் செய்யப்படும் பெருமளவிலான முதலீடுகள் கட்டுமானப் பொருள்களின் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு, பொதுவான பண வீக்கம், வளர்ச்சிப் பணிகளை விரைவுபடுத்துவதற்கான தேவை, இதுகுறித்து மூன்றாம் மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, உயர்மட்டக் குழுவானது மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு பல்வேறு மாநகராட்சி அமைப்புகளுக்கு உள்ள நிதி நிலை அதிகாரங்களை உயர்த்துமாறு பரிந்துரை செய்துள்ளது. அரசானது, மேற்சொன்ன உயர் மட்டக் குழுவின் பரிந்துரைகள் ஏற்றுக்கொண்டுள்ளது; மற்றும் இந்த நோக்கத்திற்காக மாநகராட்சி தொடர்பான சட்டங்களைத் தக்கவாறு திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது.

3. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

DTP—IV-2 Sup.(T) (40)—4